# திராவிடநாடு



இறந்துபோனவர்களை சுலபமாகக் கொளுத்தும் இயந்திரம் ஒன்றை கல்கத்தா சுடுகாட்டில் நிர்மாணித்துள்ளார்கள். மின்சாரத்தால் இயங்கும் இதன் மீது சவங்களை வைத்து, இயக்கினால், சில நிமிடங்களில் ஆர்ப்பாட்டமும் ஆர்ப்பரிப்பும் செய்து பிணமான மனிதன் வெந்துபோகி விடுவான். இதன் விலை இரண்டரை இலட்சம் ரூபாய்! இதை ஸ்விட்சர்லாந்து கம்பெனியிலிருந்து மேற்கு வங்க காங்கிரஸ் சர்க்கார் வாங்கியிருக்கிறது.

*

உலகத்தில் இப்போது எல்லா நாடுகளிலும் சேர்த்து கிட்டத்தட்ட 50,000 அணுகுண்டுகள் இருப்பதாக கிழக்கு ஜெர்மனி விஞ்ஞானி ஒருவர், தெரிவித்துள்ளார். இவைகளெல்லாம் பூமிக்குக் கீழே மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகிறார், 50,000 அணுக்குண்டுகள்! தப்பித்தவறி வெடித்தால்...?

*

உதகையிலிருக்கும், ஜோத்பூர் மகாராஜாவுக்குச் சொந்தமான புகழ்பெற்ற 'ஆரன்மூர்' மாளிகையை வாங்கி, கோடைக் காலத்தில் அங்கே சட்டசபை கூட்டங்களை நடத்துவது பற்றி சென்னை சர்க்கார் மிகத் தீவிரமாக யோசித்துக்கொண்டுள்ளதாம். அந்த மாளிகையை என்ன விலைக்கு வாங்கலாம் என்பது குறித்து மதிப்பு போடும்படியும் உயர்தர இன்ஜினீயர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

*

புது டில்லியிலிருக்கும் இந்திய சர்க்கார் அலுவலகங்களில் சிலவற்றை, பல மாகாணங்களுக்கு மாற்றப்போகிறார்களாம். 'எல்லாம் டில்லியிலேயே இருக்கிறது' என்று கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டிலிருந்து தப்புவதற்குத்தான் இந்த ஏற்பாடாம். இப்படி 'இடம் பெயர்க்கப்படும்' ஆபீசுகளை நிர்வகிக்கும் மந்திரிகளும் ஆங்காங்கே இடமாற்றிக் கொள்ளுவார்களா, அல்லது

# கேட்டீரா சேதி!

அவர்கள் டில்லியிலும், அலுவலகங்கள் மாகாணங்களிலுமாக இயங்குமா என்கிற விபரம் தெரியவில்லை. நேருவின் இஷ்டம் போல் புரோகிராம மாற்றப்படலாமல்லவா?

*

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏழைக் குடும்பங்களுக்கு கர்ப்பத் தடை மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுமென்று டில்லி பார்லிமெண்டில் சுகாதாரத் துறை துணை அமைச்சர் மரகதம் சந்திரசேகரன் 7ந் தேதியன்று தெரிவித்துள்ளார்.

*

நேரு பிறந்த மாகாணத்திலுள்ள இலக்குமணபுரியில் ஆடி அமாவாசையன்று பலர் செத்தார்களாம்! 'புண்யம்' தேடுவதற்காகப் பக்தர்கள் இரயில் கூரை மீது உட்கார்ந்து கொண்டு போனார்களாம். பலர், தொங்கிக் கொண்டே சென்றார்களாம். இதனால், சிலரும், குளிக்கிற இடத்தில் ஏற்பட்ட நெருக்கடியால் சிலருமாகச் செத்தார்களாம்.

*

முன்னாள் அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ட்ரூமன், தண்டனைக்காளானார். போக்குவரத்து விதிகளுக்கு மாறாக கான்சாஸ் எனும் நகரத்தில், நிறுத்தக் கூடாத இடத்தில் காரை நிறுத்தினாராம். வழக்கை விசாரித்த கான்சாஸ் நகர மாஜிஸ்திரேட், எல்லோருக்கும் விதிப்பதுபோல ட்ரூமனுக்கும் அபராதம் விதித்தார். வேண்டுமென்று செய்யவில்லையென்றார், தெரியாமல் நடந்துவிட்டதென்றும், ட்ரூமன் சார்பில் எடுத்துக் கூறப்பட்டது. சட்டத்தின் முன்னால் யாவரும் ஒன்றுதானே? அதனை, அபராதம் விதிக்கப் பட்டது! இதைக் கேள்விப்பட்ட கான்சாஸ் நகர மக்களும் சுற்றுப்புறத்திலுள்ளோருமாகச் சேர்ந்து, அபராதத் தொகையைத் தாங்களே வசூலித்து நகரமேயர் மூலம் கோர்ட்டில் கட்டியிருக்கிறார்கள் ட்ரூமன் மீது மக்களுக்குள்ள அன்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகும் இது!

*

சட்டைப்பைக்குள்ளேயே போட்டுக் கொண்டு போகக் கூடிய 'சைக்கிள் பம்ப்' ஒன்றை பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று கண்டு பிடித்துள்ளது. பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டதாகும், இது. கையாலும் காலாலும் இதைக்கொண்டு காற்று அடிக்கலாம்.

*

"நாகார்ஜுன சாகர் திட்டத்துக்கென்று 122-கோடி ரூபாய்கள் செலவிடத் திட்டமிட்டிருக்கிறது. இவ்வளவுகோடி ரூபாயையும் நிர்வகிக்கும் பொறுப்பு நம்மவர்களிடம் இல்லை. வடநாட்டு இன்ஜினீயர்கள்வசமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்ன பொருள் இதற்கு? இதற்கென ஒருபோர்டு அமைக்கப்பட்டிருக்கிறது, அதிலிருப்போர் எல்லாம் வடநாட்டுக்காரர்கள். அதனால் தான் வேலையும் சரிவர நடக்கவில்லை. இதை நிறைவேற்றும் பொறுப்பை ஏன் மாகாண சர்க்காரிடம் ஒப்படைக்கக் கூடாது" என்று ஆக. 11-ந்தேதி ஆந்திர சட்டசபையில் காரசாரமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார் வாவிலா கோபாலகிருஷ்ணய்யா எனும் எம். எல். ஏ.

*

மெட்ரிகுலேஷன் படித்தும் வேலையில்லாத காரணத்தால் 3897 பேர் இரயில்வேயில் 'பியூன்' களாக யிருக்கிறார்களாம். இத்தகவலை இரயில்வே துணை மந்திரி அழகேசன், பார்லிமெண்டில் வெளியிட்டிருக்கிறார்.

★

# ஒன்பது-ஒளியில்லை

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [ 19—8-56 ] தனிப் பிரதி 2 அணு [ இதழ் 7

மண்வெட்டிக் கூலிதினலாச்சே!—எங்கள்
வாள் வலியும் வேல் வலியும் போச்சே!
விண்முட்டிச் சென்ற புகழ் போச்சே!—இந்த
மேதினியில் கெட்ட பெயராச்சே!

சுதந்திர எழுச்சியைப் பற்றிப் பாடவந்த பாரதியார், மறவனுடைய நிலை என்ன என்பதை, இவ்விதம் படம் பிடித்தார். இந்த மறவர்களுக்குப் பண்டையபுகழ் மீண்டும் வரும் காலம் எது, வாள் வலியும்-வேல் வலியும் பெறுங் காலம் மலருமா, விண்முட்டிச் சென்ற புகழ் வருமா, என்கிற ஏக்கத்துடன் பாடினர்.

மண் வெட்டிக் கூலி தின்னும் நிலைக்குக் காரணமாயிருப்பது, வெள்ளைக்காரன்தான் என்பது கவியின் கருத்து.

அந்த வெள்ளையன் போய், நாட்டில் சுதந்திரம் மலர்ந்து ஆண்டுகள் ஒன்பது ஓடிவிட்டன. அரசாங்கத்தின் உத்தரவால் பள்ளிகளும் பணிமனைகளும் விளக்கொளியாலும், கொடித் தோரணங்களாலும் கொண்டாடுகின்றன இந்த நாளை! ஆனல், கவிஞர் கண்ட கனவு, நனவாயிற்ரு? வாள் வலியும் வேல் வலியும் கொண்டு பண்டைப் புகழுடன் மறவன் வாழவேண்டும் — அதற்கு தடையாயிருப்பது வெள்ளையன்—அவன் அகலவேண்டும் —அப்போது சுகம் மலருமென்று, தோள் தட்டிப் பாடினர். ஒன்பதாண்டுகளாகி விட்டன, அவன் போய். ஆனல் மறவன் வாழ்க்கையில் மலர்ச்சி உண்டா! மண் வெட்டிக் கூலி தினுது மகிழ்ந்து உலவுகிருனு!

'இல்லை! இல்லை!" என்று கூறுவதுபோல கலங்கிய கண்களுடனும், காய்ந்த வயிறுடனும் காட்சியளிக்கிருன், மறவன். அவன் வாழும் தமிழ் மாநிலம் தவிக்கிறது—தருக்கர், அவனுக்கு வாழ்வளிக்க மட்டுமல்ல, பழம்புகழின் சிறப்பையும் அளிக்க மறுத்துவிட்டனர். கடந்த 10-தேதி டில்லிபார்லிமெண்டில், உள்நாட்டு அமைச்சராயிருக்கும் பண்டிதபந்த் பகிரங்கமாகவே அறிவித்துவிட்டார், "தமிழ்நாடு என்று பெயர் சூட்ட இயலாது" என்று.

வாழ்வுமில்லை! வசிக்கும் நாடும் பழம்புகழால் அழைக்கப்படப்போவதில்லை! வணங்கி வாழ்த்திப் போற்றிப் புகழ்பாடிய மறவனது மாத்தமிழும் மலர்ச்சிபெறும் மார்க்கமில்லை! ஆனல், "இந்த ஒன்பது ஆண்டுகளிலே நாம் சாதித்த செயல்கள் அளவற்றன. அவற்றை எண்ணும் பொழுது நமக்கே பெருமை ஏற்படுகிறது" என்பதாக, சுதந்திர தினச் செய்தி தருகின்றனர்.

இந்த ஒன்பது ஆண்டுகளில் சாதித்தவை அளவற்றன என்கின்றனரே தமிழ் நாட்டுக்கு அளித்திருக்கும் சாதனைகள் என்ன? தேவிகுளம், பீர்மேடு போயிற்று! தமிழ் நாடு எனும் பெயர் வைக்கவும் முடியாதென பந்த் மறுத்துவிட்டார். நாடும் மொழியும் நலிந்து வாடும் மக்கள் பெற்ற பரிசுகள் இவை!

ஆளவந்தோரின் ஆட்சியிலே நன்மைகள் மலர்ந்திருந்தால், நாடும் மொழியும் சிறப்புற்றிருந்தால் அதனை மக்களின் விழியும் பேச்சும் எடுத்துக் காட்டும். யார், என்ன சொன்ன போதிலும் ஏற்கார்—"எம்து ஆட்சியைப் போலுண்டோ" என்று இறுமாந்து உரைப்பர், அவ் வண்ணமா நாடு உளது?

தமிழனுக்கு வேடிக்கை காட்டி விசாரத்தை மறந்திடச் சொல்வதுபோல, இவ்வாண்டு 'சுதந்திரதின பவனி'யைக் குடி அரசுத் தலைவர் பாபு ராஜேந்திரபிரசாத், சென்னையில் நடத்திக் காட்டினர்.

கோலாகலமான விழாவாம்! கண்கொள்ளாக் காட்சியாம்! குதூகலம் சொல்லி முடியாதாம்!

'தேசிய' ஏடுகள் தீட்டிக் காட்டும் 'சேதிகள்' இவை.

மக்கள் மனம் உண்மையில் எண்ணிக்கொண்டிருப்பது என்ன?

ஒன்பதாண்டுமாகிவிட்டது, 'ஓடப்பர்' நிலை மாறவில்லையே, 'உயரப்பர்'கள்தான் புகழ்பாடி வலம்வருகிருர்கள், ஆண்டு ஒன்பதான பிறகும் ஒட்டிய வயிறுதானு என்று கேட்டாலோ, ஆளவந்தார் 'உதையப்பர்' ஆகிவிடுகின்றனரே என்றெண்ணி ஏங்குகின்றனர்.

அடக்கு முறையை அவிழ்த்துவிட்டு, மக்களின் உரிமைக் கிளர்ச்சிகள் அடக்கப்படுகின்றன.

வடநாடு-தென்னுடு, பேதம் நாளுக்கு நாள் வளரத்தக்க விதமான ஏற்பாடுகளே மிகுந்து வருகின்றன.

இந்திமொழி ஆதிக்கமும் வடநாட்டுப் பொருளாதார ஏகாதிபத்தியமும், தமிழ் மக்களை இறுகப் பிடித்துக் கொண்டுள்ளன.

விலைவாசி விஷமாக ஏறிக்கொண்டு இருக்கிறது—நடுத்தர மக்கள் 'ஓட்டாண்டி'களாகும் நிலை பிறக்கிறது.

விசைத்தறி எனும் புதிய ஆபத்து கிளம்பி, கைத்தறியாளர்களின் எதிர்காலத்தை மிரட்டுகிறது.

உழவர்களின் உரிமைக்கான 'உதட்டுபசாரம்' பேசப்படுகிறதேயன்றி, நிலப்பிரபுக்களின் கொட்டம் ஒழிக்கப்படும் சட்டம் இயற்றப்படவில்லை.

அடுக்கடுக்காக அவதி கிளம்புகிறது — ஆளவந்தார்களோ, விழா கொண்டாடுகிருர்கள்!

ஆண்டு ஒன்பதும் ஆகிவிட்டது, 'ஆமதாபாத்'தான் காண்கிறோம்.

ஒளியில்லை வாழ்வில், விழாவிலே ஒய்யாரம் காட்டுகிருர்கள்!

"நாம் அரும்பாடுபட்டு காந்திய முறையில் சம்பாதித்த சுதந்தரத்தை நினைவுமூட்டும் சுதந்திரதினத்தன்று நம் மக்கள் தேசியக் கொடிகளைக்கூடத் தத்தம் வீடுகள்மீது பறக்கவிடாமல் இருக்கிருர்களே" என்று பக்தவத்சலனர் கூறுகிருர், மகத்தான சாதனைகளின் பலனை உணர்ந்திருந்தால், மக்கள் இப்படிச் சோர்வுற்ருயிருப்பர்?

விழா நடக்கிறது ஒவ்வோராண்டும்—சர்க்காரும் சம்பிரதாயம் குறையாமல் விளக்கொளிபோட்டும் வானொலி பாட்டும் கட்டி, கொண்டாடுகிறது. கவியின் கனவு, பலிக்காதது மட்டுமல்ல—நிலைமையும் மோசமாகிக்கொண்டே போகிறது. கடந்த ஆண்டுக்கு இந்த ஆண்டு நாடு சிந்தியிருக்கும் இரத்தமும், சுடுகாட்டுக்கு அனுப்பியிருக்கும் பிணங்களும் அதிகம். அதனல்தான் பக்தவத்சலம் கூறுவதுபோல், இவர்களது ஆர்ப்பாட்டங்களையும் விழாக்களையும், அலட்சியத்தோடு நாடு பார்க்கிறது. ★

## முகப்பு விளக்கம்

போர்ச்சுகல்—கடல்மிசை காட்சி தரும் ஓர் கவின் மலர்த் தோட்டம் என்பர்.

எங்கும் காணப்படாத விதவிதமான வண்ணப் பூக்களும், வகை வகையான தருக்களும், பச்சைப் பசேலென்று பார்த்திடப் பேரின்பம் தரும் செடி கொடிகளும் நிரம்பி எழிலிடமாக இருக்கிற நாடு போர்ச்சுகல்.

35,000 சதுரமைல் அளவுள்ள இந் நாட்டில் முக்கால் பகுதி இது போன்ற தோட்டக் காடு. 2,700 வகை செடிகொடிகள், காணப் படும் போர்ச்சுகல், மலர் வனம் போன்றிருப்பது கண்டு மகிழாதார் இல்லை.

சிறிய நாடுகளுக்கு வாழ்வு ஏது? என்று கேட்போரைப் பார்த்துச் சிரிப் பது போல, நீண்ட காலமாகப் போர்ச் சுகல் தனி அரசு செலுத்தி வாழ்ந்து வருகிறது.

சிறிய நாடுதானே, பாய்ந்து பிடித் துக் கொள்வோம் என்று எந்த வல்ல ரசும் கிளம்பி விடவில்லை.

இரண்டு உலகப் பெரும் போர்களின் போதும், போர்ச்சுகல் தன் சுதந் திரத்தை இழந்து விடவில்லை.

மாருக, சின்னஞ்சிறு போர்ச்சு கலின் பிடியில், பெரிய பாரதத்தின் ஒரு பகுதியான 'கோவா' சிக்கிக் கிடக் கிறது— அடிக்கடி சீறிப் பேசும் நேரு வுக்கு, உலகஅரங்கிலே எத்துணையோ செல்வாக்கு உண்டு என்கிருர்கள், எனினும் இந்த'கோவா' விஷயத்திலே, நியாயம் காண எந்த வல்லரசின் தயவும் அவருக்குக் கிடைக்கவில்லை.

பண்டைய நாட்களில், போர்ச்சுகல், உலகு புகழ் சாம்ராஜ்யாதிபதி கோலத் தில் இருந்ததுண்டு.

போர்ச்சுகல், ஆற்றல் மிக்க வீரர் பல ருக்குத் தாயகம்; திக்கு தெரியாமல் எப் பக்கம் சென்ருல் எநத நாடு சென்ற டையலாம் என்ற விளக்கமற்று இருந்தநாட்களில் துணிவுடன் கலம் செலுத்தி, புததம் புதுநாடுகளைக் கண்டு பிடித்த வீரவிற்பன்னர்கள் பிறந்த நாடு, போர்ச்சுகல். வாஸ்கோ டிகாமா, போர்ச்சுகலின் புதல்வர்களில் புகழ் மிக்கவன். புதிதாக, கடல் மார்க்கம் கண்டறிந்தும், அதுவரை ஐரோப்பிய மகக்களுக்குத் தெரியாதிருந்த நாடு பலவற்றுடன் புதிய தொடர்பு ஏற்படுத்தியும், புகழை நிலை நாட்டியதுடன், போர்ச்சுகலுக்குப் புதிய ராஜ்யங்கள் கிடைக்கச் செய் தனர், வாஸ்கோடிகாமா போன்ருர்.

வளமுள்ள இந்த நாடுகளிலே வேட்டையாடி, போர்ச்சுகல் செல்வ நாடாயிற்று; சாம்ராஜ்யம் அமைத் தது.

இந்தியாவில் பிரிட்டிஷ் பிடி பல மான காரணத்தால், போர்ச்சுகல் தன் ஆதிபத்தியத்தை இங்கு நிலை நிறுத்த முடியவில்லை. கோவா மட் டுமே இன்று போர்ச்சுகலின் பிடியிலி ருக்கிறது.

துணைக்கண்டமாம் இந்தியாவிலி ருந்தே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், வெளியேறியது கண்ட பிறகும், பிரான்சு நாடும் தன் வசம் சிக்கி யிருந்த பகுதிகளைத் திருப்பித் தந்தது கண்ட பிறகும், கிளர்ச்சிகட்கு மதிப் பளிக்க மறுப்பதுடன், அடக்கு முறை யால், கோவா விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கி விட்டிருக்கிறது போர்ச்சுகல்.

சலாசர், இந்நாட்டுக்கு முதல்வர். முகப்பில் உள்ளது அவர் ஓவியம்.

உரிமை பற்றி உலகெலாம் பேசும் நேருவின் வாதத்தை மறுக்கிருர், சலாசர்!

கோவாவில் கால்வைத்தால், கடும் போர் — விளைவு என்னவாயினும் போரிடாமல் இருக்கப்போவதில்லை என்று மிரட்டி வருகிருர்.

போர்ச்சுகல் நாடு, அளவில் சிறி யதுமட்டுமல்ல, இன்று அது ஆயுத பலத்தில் மிகுந்த வல்லரசாகக்கூட இல்லை. எனினும் ஏகாதிபத்தியக் குரலிலேயே பேசுகிறது.

போர்ச்சுகல் நாட்டு மக்களோ, மிக மிக மரியாதையாக, உபசாரம் பேசி, மற்றவர்களை மகிழ்விக்கும் இயல் பினராம்.

மேன்மை தங்கியவரே! என்று மரி யாதையாக அழைத்தே பேசுவராம், வண்டியோட்டியிலிருந்து, கடைக் காரர் வரையில்.

ஆனல், இந்த மரியாதையும் உப சாரமும், போர்ச்சுகலில். கோவா பிரச்சினையில் மட்டும், உருட்டுவிழி தான், மிரட்டல் பேச்சுதான்.

போர்ச்சுகல், ஆடவர் நாடு என்று கூறத்தக்கநிலையில் உள்ளது; எல்லா ஊழியமும்' மாதர் தலைமீதுதான்!! ஆடவர் உல்லாசமாகக் கை வீசிக் கொண்டு வீதியில் செல்வர், பெண் கள், தலையில், பழக்கூடையோ, மீன் கூடையோ, ஏதோ ஒரு சாமான் 'எடுத்துக்கொண்டு செல்வராம்.

பாரிஸ் பட்டுப்பூச்சிகளும், அமெ ரிக்க நாட்டு அலங்கார வல்லிகளும், நடமாடிக்கொண்டிருக்கும் பாதை யிலும், வெள்ளிநிற மீன்களைத் தட் டிலே வைத்துத் தலைமீது சுமந்து கொண்டு, கவலையற்றுச் செல்லும் மாதர்களை. போர்ச்சுகல் வீதிகளில் காணலாம்.

காலில் அவர்கள் செருப்பணிந்து கூடச் செல்வது கிடையாதாம் — இப் போது போலீஸ் தொல்லைக்குப் பயந்து காலில் செருப்பணிகின்றன ராம்—போலீசின் பார்வை மறைந்த தும், அதனையும் கழற்றிவிடுவராம்.

புருஷன் இறந்து, குடும்பத் தலைவி யானுலொழிய, 'ஓட்' போடும் உரிமை மாதருக்குக் கிடையாது.

கலியாணம்—பெற்ருேரின் ஏற்பா டாகத்தான் இப்போதும் பெரும் அள வுக்கு இருந்து வருகிறதாம்.

மெள்ள மெள்ள, பெண் உரிமை பற்றிய பேச்சு எழுகிறது என்கின்ற னர்.

கவலையற்று, கோவேரிக் கழுதை மீதமர்ந்து உலாவரும் ஆடவரும், 'தலைச் சுமையுடன் நடந்து செல்லும் பெண்களும், இன்னும் சர்வதாரண மான காட்சியாக இருப்பது, போர்ச்சு கலில்.

லிஸ்பன் தலை நகரம். இந்நகருக்கு அழகளிக்கும் விதமான ஏழு குன்று கள் உள்ளன,

ஓபார்ட்டோ என்பது, அடுத்த பெரிய நகரம்.

இங்கு தயாரிக்கப்படும் மதுவுக்கு உலகில் பல இடங்களில் அதிகமான 'கிராக்கி' உண்டு என்கின்றனர்.

கோஸ்ட்டா டி சோல் என்ருேர் கட லோர உல்லாசபுரியில், உள்நாட்டு, வெளிநாட்டு சீமான்கள் பொழுது போக்க வருகிருர்கள்.

போர்ச்சுகல், முடியிழந்த மன்னர் கள் பலருக்கு, தங்குமிடமாக இருக் கிறது.

இத்தாலி நாட்டு மன்னன், ஸ்பெ யின் நாட்டு ஆட்சி உரிமை இழந்த வன், பிரன்சு நாட்டு அரசன் என்று உரிமை 'ஜம்பம்' பேசுபவன் — ஆகி யோருக்கு போர்ச்சுகல், தங்குமிட மாகிவிட்டது,

இதைவிட வேடிக்கை, நான்தான் போர்ச்சுகல் நாட்டுக்கு முடிமன்னன் —ஆனல் உரிமை மறுக்கப்பட்டுவிட் டது என்று கூறிக்கொள்ளும் ஒரு பேர்வழியும், இங்கு அடிக்கடி வந்து போவதுண்டாம்.

★

காஞ்சீபுரம்

19—8—'56

# தம்பி !

"நேற்று, கூட்டத்திலே என்ன விசேஷமான விஷயம் பேசினார். நான் வேரூர் இடத்திலே மாட்டிக்கொண்டேன் — ஒரு வம்பிலே சிக்கிக்கொண்டேன். அதனால் வரமுடியவில்லை."

"போயும் போயும் உனக்கு நேற்றுதான் நாள் கிடைத்ததா வேறு வேலை பார்க்க. நேத்துப் ப்ரமாதம்......

"என்ன? என்ன? புது சேதி ஏதாவது......!"

"சாகடித்துவிட்டார்! அந்தப் பயல்கள் இருந்திருந்தால் முகம் செத்துப் போயிருக்கும். ஏண்டா பசங்களா! நீங்களா சட்டசபைக்குப் போகணும்? என்று கேட்டுவிட்டு ஒரு சமாசாரம் சொன்னார், தூக்கி வாரிப் போட்டுவிட்டது போயேன்......"

"என்ன சொன்னார்...... என்ன?"

"என்னோடு இருந்துவிட்டு ஓடிப்போனான்களே இந்தப் பசங்க, இதுகளெல்லாம், என்னமோ எம். ஏ. பி. ஏ. என்று போட்டுக்கொள்கிறானுங்க. இந்த எம். ஏ. பி. ஏ. எல்லாம் எப்படிக் கிடைச்சுது? போனா போகட்டும்னு நான் பலபேருக்குச் சொல்லி, மார்க்கு போடச் சொல்லி, இதுகளுக்கு பி. ஏ. எம். ஏ ன்னு வாங்கிக்கொடுத்தேன்.—என்று சொன்னாரு...... சிரிச்சி சிரிச்சி வயிறெல்லாம் புண்ணாப் போச்சி போ......"

"அப்படியா சொன்னார்?"

"ஆமாம்! அந்தப் பசங்களுக்கு இதைக் கேட்டா, வெட்கம் பிடுங்கித் தின்னுமல்லவா?"

"அட போப்பா! எனக்குந்தான் வெட்கமா இருக்குது; இப்படியெல்லாமா பேசுவது?"

"அட, அந்தப் பசங்களைச் சொன்னா உனக்கு என்ன வெட்கம்? நீ என்ன பி. ஏ. வா, எம். ஏ. வா?"

"நீயும் நானும் பி. ஏ. இல்லெ... ஆனா, நம்ம குருசாமி ஒரு பி. ஏ. நம்ம ஜெனார்தனம் எம். ஏ. இன்னும் ராஜாராமு, வீரமணி, வேதாசலம் இவர்களெல்லாம் எம். ஏ. பி. ஏ. ன்னு இல்லையா! என்கூட இருந்தவங்களுக்கு நான்தான் மார்க்கு போடச் சொல்லி பி. ஏ. எம். ஏ. ஆக்கினேன்னு அவர் சொன்னா, அது இவங்களுக்கும் பொருந்துதே. அப்படித்தானே பொதுவா உள்ளவங்களெல்லாம் எண்ணிக் கொள்ளுவாங்க. தன் பக்கத்திலேயே பி. ஏ.வும் எம். ஏ.வும் வைத்துக்கொண்டு, நான்தான் பாஸ் போட்டு இதுகளுக்குப் பட்டம் வரச் செய்தேன்னு சொன்னா,

# "ஒரே ஒரு பிரச்சினை.....!"

நம்ம பி. ஏ. எம். ஏ.க்களுக்கும் கூடத்தானே சுருக்குன்னு தைக்கும்...... வெட்கமா இருக்கும்"

"அடெ, அதுக்குச் சொல்றியா"

"தன்னோடு இருந்துகொண்டு தனக்குப் பயன் பட்டுக்கொண்டு இருந்த வரையிலே சும்மா இருந்துவிட்டு, வேறே கட்சியானதும், இதுகளுக்கு பி. ஏ. எம். ஏ. எல்லாம் நான்தான் வாங்கிக் கொடுத்தேன்னு பேசறாரே, இதோ இபப இவரோடு இருக்கிற பி. ஏ. எம். ஏ.க்களுக்கும் இதே 'சூடு' தானே கிடைக்கும், இவரை விட்டுப் பிரிந்தா? என்று பொதுவா இருக்கிறவங்க, பேசிக்கொள்ளமாட்டாங்களா?"

"அட, அப்ப பார்த்துக்கொள்வோம். இப்ப, இதுகளுக்குச் சூடு கொடுக்கிறபோது, கேட்கறதுக்கு சந்தோஷமா இருக்குது; இல்லையா?"

"அதுபோலக்கூட எனக்கு இதிலே சந்தோஷம் ஏற்படவில்லை. கூட இருக்கிறவரையிலே, இரத்தினமே! மாணிக்கமே! அறிஞனே! கவிஞனே! என்றெல்லாம் தூக்கி வைக்கிறது, பிறகு அதே ஆசாமிகளுக்கு அ ஆ தெரியாதுன்னு பேசுகிறதுன்னா, கேட்கும்போது சிரிப்பு வரும், கை தட்டலாம்; ஆனால், கொஞ்சம் யோசித்துப் பார்க்க ஆரம்பிச்சா, சரி இல்லைன்னு நமக்கே தோணும், நெஞ்சு உறுத்தும். எனக்கு உண்மையாச் சொல்றேன், வெட்கமாகக்கூட இருக்குது. முன்னுக்குப்பின் முரணா பேச்சா இருக்குதே என்பதாலே அல்ல. இந்தப் பயல்களுக்கெல்லாம், நான்தான் பி. ஏ. எம்.ஏ.ன்னு பட்டம் வாங்கிக் கொடுத்தேன்னு அவர் சொல்கிறபோது, அந்தப் பசங்க இவ்வளவுதானா என்றுமட்டுமா ஜனங்க எண்ணிக்கொள்ளுவாங்க. இந்தப் பெரியவர், பார்த்தயா, வெட்டி ஆளுங்களுக்கெல்லாம், அவனுங்க தனக்கு வேண்டியவனுங்க என்கிறதுக்காக, யாராருக்கோ சொல்லி மார்க்கு போடச் செய்து பட்டம் வாங்கிக் கொடுத்தாராம்! அவரே சொல்கிறார். இவ்வளவு பெரிய தலைவரா இந்த மாதிரி வேலை செய்வது? போலிச் சரக்குகளை வைத்துக்கொண்டுதான்கட்சி நடத்தி வந்தார்னு, அவர் பேசறதிலே தெரியுது. அது சரியா? அப்படின்னு பொதுவா உள்ளவங்க எண்ணிக்கொள்ளமாட்டாங்களா? அதை நினைச்சாத்தான் எனக்கு வெட்கமாக இருக்குது"

"பொதுவா உள்ளவங்களைப் பத்தி நமக்கென்ன கவலை. நாம்— அந்தப் பசங்க! அவ்வளவுதான்"

"அது போதாதே, அந்தப் பசங்களையும் நம்மையும் கவனித்துக்கொண்டு, எதிலே உண்மை இருக்கு, நியாயம் இருக்கு என்று கண்டறிந்து ஆதரவு தருவதற்கு இருக்கிற பொதுவானவர்களைப் பொறுத்துத்தானே கட்சி வளருவது இருக்கிறது"

"அட சரிதான் போயேன், மகா கண்டவன், மேதாவிதான் நீ...... போ......போ......"

என்ன அண்ணா! எங்கே நடைபெற்ற உரையாடல். கற்பனையா? காதில் விழுந்ததா? என்றெல்லாம் கேட்கத் தோன்றும் தம்பி!

கற்பனை அல்ல என்றுமட்டும்தான் கூற விரும்புகிறேன். சென்னையில், எங்கோ ஓரிடத்தில் நடைபெற்ற உரையாடல். முழுவதும் இட்டுக்கட்டியது அல்ல.

இதை ஏன் நான் உனக்கு எடுத்துக் கூறுகிறேன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பகை உமிழும் போக்கில், எதை வேண்டுமானாலும் சொல்லி அந்த நேரம் 'சபாஷ்' வாங்கிக் கொள்ளும் போக்கு, இப்போதெல்லாம் திராவிட கழகத்திலேயே சிலருக்குப் பிடிக்கவில்லை என்பதை இந்த உரையாடல் ஓரளவுக்கு விளக்குவதனால்தான். மற்றபடி அந்த இடத்தார் தொடுத்திடும் ஏசல்களைக் கண்டு, எனக்கென்ன புதிதாக வருத்தம் வர இருக்கிறது. எவரும், எந்தவிதமான பகையின்போதும் சொல்லக் கூசும் சொற்களை எல்லாம் சொல்லியாகிவிட்டது—நானும் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டாகிவிட்டது.

திடுக்கிடவைப்பது — நாவினால் சுடுவது—பிரசார முறையில் ஒரு வகை.

வாதிடுவது—வழிக்குக் கொண்டு வருவது — வாஞ்சனையைப் பெறுவது — மற்றோர் வகை, பிரசார முறையில்.

தம்பி! நமக்கு இந்த இரண்டாவது முறை போதும்— அது தக்க பலனளித்து வருகிறது — அந்த முறையை மேலும் மேன்மையுடையதாக்கிக்கொள்வதற்கே நமக்கு எல்லா வாய்ப்புகளும் பயன்பட வேண்டும் என்பது என் விருப்பம்.

மயிலே! மயிலே! இறகுபோடு என்றால் போடுமா என்பதுபோல தற்குறிகளும், கற்றறி மூடர்களும், சுயநலப் புலிகளும நயவஞ்சக நரிகளும், ஆரிய அடிமைகளும் மலிந்து கிடக்கும் இந்தச் சமுதாயத்தில், சுடச்சுடக் கொடுப்பது, 'ரோய ரோய'த் திட்டுவது, ஏசலை வாரி வாரி வீசுவது என்னும் முறைதான் ஏதேனும் ஒருதுளியாவது பலன் அளிக்குமே தவிர, அன்பர்களே! நண்பர்களே! எண்ணிப்பாருங்கள், தவறு இருந்தால் எடுத்துக்காட்டுங்கள்! காரணம் காட்டி எங்கள் கோரிக்கையை மறுத்துப் பேசுங்கள்! என்றெல்லாம் கனிவுடன் பேசுவது, சரியல்ல, பலன் தராது—என்று எண்ணிக்கொண்டு, கேட்டதும் திடுக்கிடட்டும், தீபோலச் சுடட்டும், என்ற முறையைப் பிறர் கையாள்வது வெற்றி தருகிறது என்று எண்ணிக்கொள்வார் யாருமில்லை—பேசுபவர்களுக்கு அன்றைக்கு ஒரு மனத்திருப்தி — வெளுத்துக் கட்டிவிட்டோம்—ஒரு பிடிபிடித்துவிட்டோம் — பயல்களுக்குச் சரியான சவுக்கடி கொடுத்துவிட்டோம்—என்று எண்ணி எக்களிக்கவும், எதிரே நின்று எதை எதையோ எதிர்பார்த்து ஏவல் செய்வோர், "ஒழிந்தானுக! இனித் தலைகாட்ட மாட்டானுக! தொலைஞ்சானுக! இனி கால்தூசுக்கும் எவனும் இதுகளை மதிக்கமாட்டானுக!" —என்று பேசக்கேட்டு, பூரிப்பதும் தான் மிச்சம் — உருவான பலன் கிடைப்பதில்லை. ஆர அமர இருந்து கணக்குப் பார்த்தால், உண்மை விளங்காமற்போகாது, நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், ஏன் சிலர்

(15-ம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பா, போனாலும்!

[அரங்கண்ணல்]

அகில உலக தொழிற் துறை மாநாட்டுக்கு அமைச்சர் பக்தவத்சலம் சென்று திரும்பியிருக்கிறார்.

ஸ்விட்சர்லாந்திலே நடந்த அம் மாநாட்டுக்கு, இவர் செல்லுகிறார் எனக் கேள்வியுற்ற போது, சிந்தை மகிழ்ந்தோம்.

மகிழ்ச்சிக்குக் காரணம், தென்னாட்டைச் சேர்ந்த இவர், இந்தியாவின் சார்பில் அனுப்பப்படுகிறார் என்பது ஒன்று. இன்னொன்று, எப்போது பார்த்தாலும், செக்கு மாடு போல சொன்னதையே சொல்லிச் சொல்லி பழக்கப்பட்டுப் போன இவரது உள்ளம், மேனாடுகளைக் கண்டாவது புது மெருகு பெறாதா எனும் ஆசை.

சென்றவர் திரும்பிவிட்டார்—ஸ்விட்சர்லாந்து மட்டுமல்ல, ஜெர்மனி, இத்தாலி, ஸ்வீடன், பிரான்ஸ் இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளையும் சுற்றிப் பார்த்திருக்கிறார். வல்லரசாக வாழ்ந்து இன்று இடுக்கித் தாக்குதலுக்கு இரையாகிக் கிடக்கும் ஜெர்மனியையும், உலகத்தின் மணிமுடியாகத் திகழ்ந்து இன்று மண்மேடாக விளங்கும் இத்தாலியையும், பார்ப்பவர் பிரமிக்கும் வகையில் முன்னேற்றமடைந்துள்ள ஸ்வீடனையும், பார்க்கப் பரமானந்தமளிக்கும் பாரிசையும், ஜனநாயகம் கொழிக்கும் இங்கிலாந்தையும் கண்டுவிட்டு வந்துள்ளார்.

பக்தவத்சலம் மேனாடு சென்று திரும்புவது இதுதான் முதல் முறை. போனதும், அகில உலக தொழிலாளர் துறை சம்பந்தமாக!

ஆங்காங்கு மக்கள் பெற்றுள்ள நல்வாழ்வையும், தொழிலாளர் எவ்விதம் துயர் துடைத்து வாழுகின்றனர் எனும் வகையையும் கண்டறிந்து வருவார் என்றே எதிர்பார்த்தோம். அவரும் போன இடத்தில், சமயம் கிடைத்தபோது, கண்டிருக்கிறார்,

"ஸ்வீடனில் ஒரு கிராமத்தைப் பார்க்கவேண்டுமென்றேன். 'நாம் இப்பொழுது இருப்பது ஒரு கிராமந்தான்', என்றார் என்னுடன் வந்தவர். அப்படியே திகைத்தேன். ஒரு வீடாவது பழைய நாளைய வீடு இல்லை அங்கே. பழைய வீடு ஒன்றை மியூசியத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள்"

ஸ்வீடன், பாலைமட்டுமே முக்கிய தொழிலாகக்கொண்டு வாழ்கிற நாடு! அங்கே இந்த திகைப்பூட்டும் காட்சியைக் கண்ட அமைச்சர் "இவ்வூரில் ஒரு ஆலைத் தொழிலாளியின் வாசஸ்தலம் எப்படி இருக்கும்? என்று ஒருவரிடம் கேட்டேன். 'காட்டுகிறேன' என்று அவர் என்னிடம் ஏதோ பேசிக் கொண்டு, ஒரு கட்டிடத்தினுள் பிரவேசித்தார். அங்கே ஹாலில் ஒருபுறம் சில அலமாரிகளில் புத்தகங்கள் நிறைந்திருந்தன. ஆடவரும் பெண்டிருமாக அந்த அழகான ஹாலிலே அமர்ந்து வாசித்துக்கொண்டிருந்தார்கள். விலை உயர்ந்த ரேடியோ ஒன்று ஒலித்துக்கொண்டிருந்தது, அது ஒரு வாசகசாலை என்று நினைத்தேன். அதுதான் இல்லை. 'இதுதான் ஒரு தொழிலாளியின் வீடு' என்று கூறப்பட்டது. முழித்தேன்."

திகைத்தேன், விழித்தேன், என்று தெரிவிக்கிறார். ஸ்வீடனை விட்டு ஜெர்மனிக்குச் சென்றபோது, 'இயந்திரசாலை மயமாக' இருந்ததைப் பார்த்திருக்கிறார்—பாரிஸ் மாநகரின் காட்சியைக் கண்குளிரக் கண்டிருக்கிறார். ரோமாபுரியின் எழில்மிக்க நாட்களை எண்ணி எண்ணி உருகியிருக்கிறார் என்றுதான் எண்ணத்தோன்றும்.

அமைச்சர் பக்தவத்சலம் இவைகளைக் கண்டார் ஊனக்கண்களால்! ஆனால் அவருடைய இதயக் கண் இந்த எழில்மிகு ஊர்களையும், ஏற்றமிக்க மக்களையும், அவர்தம் சிறப்புறு வாழ்க்கையினையும் பார்த்துக்கொண்டிருந்த வேளையில், எங்கேயிருந்தது, தெரியுமோ?

"காசி, பிரயாகை, ஹரித்வார், பூரி, திருப்பதி, ராமேஸ்வரம், காஞ்சி கருட சேவை, திருவாரூர்த் தேர், மாயவரம் கடைமுழுக்கு, சிதம்பரம் ஆருத்ரா, கும்பகோணம் மகாமகம், ஸ்ரீரங்கம் ஏகாதசி, மதுரை சித்ராபௌர்ணமி, திருச்செந்தூர் ஆடிவேல்..."

இந்தக் காட்சிகள்தான், அமைச்சரின உள்ளத்தில் ஆட்டமாடிக் கொண்டிருந்ததாம. அமைச்சர் சென்றது, அகில உலக மாநாட்டுக்கு—அங்கு சென்ற இவர், ஆங்காங்குள்ள நாடுகளையும், நகர்களையும் கண்டிருக்கிறார். எந்த நோக்குடன்? இவைகளைப்போல், நமது நாட்டையும் ஆக்கவேண்டும, நமது தொழிலாளரும இவ்வளவு சிறப்பாக வாழச் செய்யவேண்டும் என்கிற எண்ணத்தில், அல்ல; ஒரு உல்லாசப் பிரயாணி ஆற்றையும அழகுச் சோலையையும கண்டு ரசிப்பானே, அதுபோல! ஆனால் இவைகளைக் கண்டுகொண்டிருந்த நேரத்தில் அவர் உள்ளம் எங்கு இருந்திருக்கிறது தெரியுமோ?

நமது ஊரில், 'இடுப்பில் டிரங்குபெட்டிகளையோ, ஓலைப் பெட்டிகளையோ சுமந்துகொண்டு ஆயிரக்கணக்கான பெண்கள் பக்தியோடு' போகிறார்களல்லவா, யாத்திரை! அதில்தான் அவர் உள்ளம்பதிந்து இருந்திருக்கிறது. அதன் காரணமாகவே, 'ஐரோப்பாவில் ஐம்பது

நாட்கள்' என்று தலைப்பிட்டு 'ஆனந்த விகடன்' இந்த வார இதழில் கட்டுரை தீட்டவந்த இவர், "இத்தாலிக்குப் போனேன்—புராதனக் கோயிலைப் பார்த்தேன்—தங்கமயமாக இருந்தது. சிதம்பரம் கனகசபையிலே கூட அந்தளவு தங்கம் இருக்க முடியாதெனக் கண்டேன. இன்னொரு இடத்தில் அறுபது படிகள் உள்ள மாதா கோவிலைக் கண்டேன். இயேசு நாதர், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு இரத்தம் சிந்திய இடமாம். அதனால் அங்கு இருந்த கிழவியரும் சிறுவர் சிறுமியரும் பாதம் படாமல், முழங்கால்களை மண்டி போட்டுக்கொண்டே படிகளில் ஏறினர். அதைப் பார்த்த போது, திருப்பதி முழங்கால் முறித்தான் மலையும், பல்லாண்டுகளுக்கு முன்பு ஸ்ரீமத் ராமானுஜர் திருப்பதி மலைமீது ஏறினபோது அது ஆதிசேஷன் மாற்றுருவம் என்பது நினைவுக்கு வந்து முழங்கால்களால் ஏறினர் என்ற சம்பவம் நினைவுக்கு வந்தது..." என்று தீட்டுகிறார்.

ரோமாபுரியைக் காணும்போது, அங்கே சிதைந்துபோன மாட மாளிகைகளையும், சீரழிந்துகொண்டிருக்கும் சின்னங்களையும் பார்க்கிறபோது உங்களுக்கும் நமக்கும் ஓராயிரம் எண்ணங்கள் ஓடிவரும். இங்குதானே, தமிழ்நாட்டு முத்தும் சந்தனமும் விலைபோயிற்று; இங்கு ஆண்ட மன்னனின் அவையில் தானே பாண்டிய மன்னனின் தூதுவனிருந்தானும்!— இப்படி எண்ணங்கள் வரும். ஜெர்மனியைப் பார்க்கிறபோது, எதேச்சாதிகாரியானதால் வீழ்ந்த ஹிட்லரும், பிரான்சு நாட்டின் வீதிகளைக் காணும்போது அங்கு நடைபெற்ற மாபெரும் புரட்சியும்—அது முற்றுப்பெறுது போன வகையும், நிழலாடும் உள்ளத்தில். ஆனால், அவருக்கு, இவை கவனத்துக்கு வரவில்லை. ஏனெனில், ஐரோப்பாவுக்குச் செல்லும் வாய்ப்பினையே அவர் இப்படிப்பட்ட எண்ணற்ற சரிதச் சித்ரங்களைச் சந்திக்கும் வாய்ப்பாகவோ, புதுமை பூத்த நாடுகளை நேரில் காணும் அரியதொரு சந்தர்ப்பமாகவோ எண்ணவில்லை. மாறாக, காசிக்கும் இராமேஸ்வரத்துக்கும் போகிற 'யாத்திரை'யைப்போலக் கருதிக்கொண்டிருக்கிறார். அதனால், சென்று வந்த சிலர், யாத்திரைக்குச் சென்றுவந்த மூலைவீட்டு முத்தனும் கோடி வீட்டுக் குப்பனும் கூறுவானல்லவா — ஏ, அப்பா! திருப்பதியில் எம்மாங் கூட்டங்கிறே? காஞ்சிபுரத்து கருடசேவை எப்படியிருந்ததுன்னு நினைக்கிறே? —என்று, அதுபோல, அவரும் வர்ணிக்கிறார்

யாத்திரை சென்ற குப்பன், இடையிடையே, 'காஞ்சீபுரத்திலே திராவிடநாடு ஆபீசுன்னு போட்டிருந்தது பார்த்தேன்; திருப்பதிக்குப் போற வழியிலே அரக்கோணம் ஜங்ஷனைப் பார்த்தேன்!' என்று கூறுவதுபோல, இவரும் அகில உலக தொழில்துறை மாநாட்டுக்குச் சென்றிருந்த நான், ஸ்வீடனில் ஒரு தொழிலாளியின் வீட்டைப் பார்த்தேன்—ஒரு கிராமத்தைப் பார்த்தேன் என்று தெரிவிக்கிறார்.

ஏனெனில், அவருக்குப் புறப்பட்ட நேரத்திலிருந்து திரும்பும் வரை, திருப்பதி வெங்கடேசனும், திருவாரூர் தியாகராசனும் அவர்களைப்பற்றி அனுதினமும் பேசி வரும் நாமும்தான் கவனத்திலிருந்திருக்கிறோம். ஐ.எல் ஓ. மாநாடோ, அங்கு பேசி முடிவெடுத்த பிரச்னைகளோ—அவருக்குப் பெரிதாகப் படவில்லை. வந்ததும் வராததுமாக, "ஐரோப்பாவில் ஐம்பது நாட்கள். என்ன கண்டேன தெரியுமா? நம்முடைய பக்திக்கும் கலாசாரத்துக்கும் கலைகளுக்கும் மிஞ்சியது உலகிலேயே கிடையாது என்று மட்டும் நினைப்பது தவறு. அங்கு பக்தி கொழிக்கிறது" என்று எழுதுகிறார்.

இப்படி இத்தாலி நாட்டு மாதா கோவிலையும், படியில் ஊர்ந்து செல்லும் இடத்தையும் கண்ட போது நினைவுக்கு வந்ததல்லவா, சிதம்பரம் கனகசபையும், திருப்பதி படிக்கட்டும்? அதுபோல ஸ்வீடன் தேசத்து தொழிலாளியின் வீட்டையும், கிராமத்தையும் கண்டபோது நம் நாட்டிலுள்ள தொழிலாளியின் நிலையும், கிராமத்தின் கவனமும் அமைச்சருக்கு வந்ததோ, என்பீர்கள்! இதுபற்றி அவர் கட்டுரையில், சிறு குறிப்புமில்லை. திகைத்தேன்! முழித்தேன்! — என்கிற அளவோடு முடித்து விடுகிறார்.

அவரால், அதுதான் முடியும்—மக்களைப் பற்றிய நினைப்பு அந்த அளவுக்குத்தான் அமைச்சரின் இதயத்திலிருக்கிறது — எனவே, திகைப்போடும் விழிப்போடும், அடங்கிவிட்டது.

ஐ. எல். ஓ. மாநாட்டுக்குச் சென்ற 'மூலவர்' இவர். அம்மா நாட்டில் பேசப்பட்ட விஷயத்தை எவ்வளவு சாதாரணமாகக் கூறுகிறார் பாருங்கள், "மேலை நாடுகளில் சுற்றிய போதும், ஐ. எல். ஓ. மாநாட்டில் கலந்திருந்தபொழுதும் தொழிலாளர்களைப்பற்றி ஒவ்வொரு நாட்டில் உள்ள சர்க்காருக்கும், முதலாளிகளுக்கும் ஏற்பட்டுள்ள விசேஷ சிரத்தையும் விழிப்பும் என் கவனத்தைக் கவர்ந்தன. தொழிலாளிகளுக்கு ஏதாவது செய்தாகவேண்டும் என்கிற பல்லவி பாடப்படுகிறது"

போதுமா, விளக்கம்? பல்லவி பாடப்படுகிறதாம்! அந்தப் பல்லவியை இவரும் பாடினரா, எந்த ராகத்தில் எனும் விளக்கமேதும் அறியோம், இரத்னச் சுருக்கமாக, 'பல்லவி பாடப்படுகிறது', என முடித்துவிட்டார், ஆனால் அங்கெல்லாம் கொழிக்கும் பக்தியைப் பற்றியும், கோவில்களைப் பற்றியும், வருணிக்கிறார், வருணிக்கிறார் அப்படி வருணிக்கிறார்!!

ஐ. எல். ஓ. மாநாடு என்பது அகில உலகத்திலுள்ள 73 நாடுகள் கூடி, ஒவ்வொரு நாட்டிலுள்ள தொழிலாளர் தம் நிலைமைகளையும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த என்னென்ன முயற்சிகள் இதுவரை செய்யப்பட்டிருக்கின்றன,—இனிமேல் செய்ய வேண்டும் என்பது குறித்தும், வாதிட்டு முடிவுகள் கட்டப்படுகின்ற இடமாகும். அதனால்தான், இந்தியாவும், தன்னுடைய பிரதிநிதியை அனுப்பிவைக்கிறது, அந்த வாய்ப்பினைப் பெற்றார். அமைச்சர் பக்தவத்சலம்! சென்றவர், கொண்டு வந்து தருவதோ, பக்தியும் கோயில் விளக்கமும்!

**இதற்கு அழிந்த பணம் நம்முடைய வரிப் பணத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.**

இந்த மாநாட்டிற்கு இவர் சென்று வந்ததால், புதுமையென்ன கண்டோம்! புதிய மாறுதல் எதனைக் காணப் போகிறோம்! —அறிகுறி ஏதுமில்லை.

ஆனால், அழிந்திருக்கிறது, நமது வரிப் பணம். இப்படிப்பட்டவர்களை பிடித்து அனுப்பும் டில்லிக்கு, உண்மையிலேயே ஐ. எல். ஓ. போன்ற அங்கங்களில் செய்யப்படும் முடிவுகளை ஏற்று நடக்கும் அக்கரையாவது உண்டா எனில், அதுவும் கிடையாது.

ஐ. எல். ஓவில் அங்கம் வகிக்கும் 73 நாடுகளில் 20 நாடுகள் தமது நாடுகளிலுள்ள வேலையற்றோர் திண்டாட்டத்தைக் குறைப்பதற்காக முழுமுயற்சிகள் எடுத்துக் கொண்டுள்ளன.

வேலையற்றோருக்கு நல்லது செய்யும் ஸ்தாபனங்கள் பலவற்றை அமைத்து, அதன் மூலம் அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும்போது உதவி வருகின்றன.

இது போல இந்தியாவிலும் அமைத்தால் என்ன? — என்று கூறி டில்லி பார்லிமெண்டில் வி. பி. நாயர்எனும் உறுப்பினரொருவர், ஆக 11-ந் தேதி, ஒரு மசோதாவைப் பிரரேபித்தார்.

ஐ. எல். ஓவில் கலந்துகொள்வதிலும், அதற்குத் தூதுக் குழுக்களை அனுப்புவதிலும், ஆர்வம் காட்டும் டில்லி, இதனை ஏற்க இயலாதெனக்கூறி மறுத்துவிட்டது. மசோதா, வீசியெறியப்பட்டது.

இந்திய உபகண்டத்தில் வேலையில்லாமல் அலைவோர், வேலையிலிருந்தாலும் நாளை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டால் என்ன செய்வதென்று உழல்வோர், ஏராளம்.

அவர்களுக்கு நிவாரணம் தேடவே இந்த யோசனையைத் தெரிவித்தார் நாயர்! ஐ. எல். ஓ. நாடுகள் பல, இப்படித்தான் செய்கின்றன என்றும் எடுத்துரைத்தார்!

உருப்படியான இந்த யோசனை ஏற்கப்படவில்லை, மறுக்கப்பட்டது.

ஆனால், வீணடம்பரத்துக்காக, அம் மாநாடுகளுக்குப் பிரதிநிதிகளைப் பிடித்து அனுப்புகிறது. அவர்களும் போன வேலையை மறந்து, பொழுதைப் போக்கிவிட்டு வருகிறார்கள்.

அந்த ரகத்தில், ஒருவராக அமைச்சர் பக்தவத்சலமும் திரும்பியிருக்கிறார். வந்ததும் வராததுமாக 'பழைய பெத்தான் பெத்தானே!', என்பதுபோல, எழுதுகிறார், தமிழில் ஒரு பாடலிருக்கிறது,

**வேத மந்திரமோதித் தேன்பால் புகட்டினும்**

**வேம்பது கரும் பாகுமோ?**

**வெண்மை தரு சீனிச் சொரிந்து பயிர் செய்யினும்**

**வெள்ளுள்ளி குணமாறுமோ?**

என்பதாக. அதுதான், நினைவுக்கு வருகிறது, ஐரோப்பாவில் ஐம்பது நாட்கள் சுற்றிவந்துள்ள அமைச்சரைக் காண்கையில்.

★

---

# ஊர்வலம்

[ஞானக்கண் பேட்டி]

★

"கேட்டீர்களா, நேரு சொன்னதை?" என்று கூவிக்கொண்டே தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்துக்குள்ளிருந்த ஜீவா அவர்களிடம் போய் நின்றேன். அவருக்கு எதிரில் நமதியக்க ஏடுகளும், பழைய 'பைல்'களும் ஏராளமாகக் கிடந்தன. அவைகளிலே மூழ்கிக் கிடந்த அவர், என்னைக் கண்டதும் விருவிருவென கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வந்தார். என்னைக் கண்டதும் ஏனிந்த பரபரப்பும் குழப்பமும் அடையவேண்டும் என்று திகைத்தேன் நான்!

"என்ன சொன்னார் நேரு? ஞானக்கண்!" என்றார். "நீங்கள் பார்க்கவில்லையா? பார்லிமெண்டிலே ஆகஸ்டு 11-ந்தேதி அவர் பேசியதைப்பற்றி!" என்றேன்.

"எதைப்பற்றி?"

'பிறகு எதைப்பற்றிப் பேசப் போகிறார். கம்யூனிஸ்டு நாடுகளைப பற்றித்தான்!" என்றேன்.

ஜீவாவின் முகம் மலர்ந்தது. ஆமாம்! அவர் பேசாமலிருப்பாரா? பழைய நேருவா, அவர்! இப்போது ரஷ்யா அவருக்கு தெரியும் — சீனா அவருக்குச் சிநேகம், — டிட்டோ, நெருங்கிய நண்பர். எனவே கம்யூனிஸ்டு நாடுகளைப்பற்றிப் பேசாமல் எதேச்சாதிகார அமெரிக்காவைப் பற்றியா பேசுவார்?" என்றார். குரலில் ஒரு குதூகலம்கூடத் தென்பட்டது.

"ஜீவா அவர்களே! நேரு என்ன பேசியிருக்கிறார், தெரியுமா?" என்றேன்.

"என்ன பேசியிருக்கப்போகிறார்! புல்கானினுடைய புகழ், குருஷ்சேவின் அரசியல் அறிவு, டிட்டோவின் இராஜதந்திரம் இதுபற்றிப் பேசியிருப்பார்..."

"இல்லை!. கம்யூனிஸ்டு நாடுகளில் நடக்கிற ஆட்சியைப்பற்றி......" என்று நான் முடிப்பதற்குள் "ஆமாம்! அங்கங்கே போய் நேரில் எல்லா விபரங்களையும் பார்த்துவிட்டு வந்தவரல்லவா? அங்காங்கே, எப்படி அணைக்கட்டுகளை கட்டியிருக்கிறார்கள், ஆலைகளின் நிர்வாகம் எவ்வண்ணம் நடக்கிறது, விவசாயத் துறையில் செய்யப்பட்டிருக்கிற புதுமைகள் என்னென்ன, இவைகளைப் பற்றியெல்லாம்தானே?" என்றார்.

"இல்லை! அவர், அவைகளைப் பற்றிப் பேசவில்லை..." என்றேன், நான்.

"என்ன?" என்று கொஞ்சம் திகைப்புடன், கேட்டார், அவர்.

"தலைபோய்விடுகிறதாமே!"

"யார் தலை...? என்றார் ஜீவா.

"சர்க்கார் எடுத்த முடிவுகளைப்பற்றி யாராவது பேசினால் அவர்களுடைய தலை காணுமற்போய்விடும் கம்யூனிஸ்டு நாடுகளில். தெரியுமா? ஒத்திவைப்புப் பிரரேபணை யென்பதும் பிரச்னைகளை விவாதிக்க வேண்டுமென்பதும் அங்குகிடையாது...'

"நேருவா, இப்படிப் பேசினார்?"

"ஆமாம்! அவர்தான். பார்லிமெண்டில் இந்த மாதம் 11-ந்தேதி இதுபோல சர்டிபிகேட் தந்துள்ளார்."

"சேச்சே!"என்றுமுணுமுணுத்த வண்ணம் ஆகாயத்தைப் பார்த்தார். கொஞ்சநேரத்துக்கு முன்பு ஆனந்தத்தோடு காட்சி அளித்த அவரது முகத்தில், குழப்பக் குறிகள் தோன்றின. "இனிமே லிங்கிருக்கக் கூடாது!" என்று கருதியவனுக, அகில இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்துக்குப் பறந்தேன், அஜாய் கோஷைச் சந்திக்கலாம் என்று. அவர்தானே, நம்முடைய ஜீவாக்களுக்கு, குருபீடம்! என்னைக் கண்டதும், அகில இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளரான அவர், "யார், நீ?" என்று கேட்டார் "திராவிடநாடு, நிருபர். பெயர் ஞானக்கண். பேட்டி காண வந்திருக்கிறேன்" என்று ஜீவாவிடம் பேசிய நினைப்பில், தமிழிலே பேசினேன், விழித்தார், அவர்! 'க்யா? க்யா?' என்றார் இந்தியில்.

"ஒரு சந்தேகம்?" என்றேன் ஆங்கிலத்தில்.

"கம்யூனிஸ்டுகளெல்லாம், காங்கிரசில் சேர்ந்துவிடும்படி நீங்கள் ஏதாவது இரகசிய திட்டம் போட்டிருக்கிறீர்களா?" என்றேன்.

"யார் சொன்னது என்றார்"

"ஆந்திராவில், கம்யூனிஸ்டுகள் பலர் காங்கிரசுக்குள் நுழைந்து வருவதாகவும், இதில் சர்வஜாக்கிரதையுடனிருக்க வேண்டும் என்று பேசியிருக்கிருர், அதனால் தான் கேட்டேன்!" என்றேன்.

"யார் இப்படிப் பேசியது!"

"அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேபர்தான்!" என்றேன்.

"அவரா, இப்படிப் பேசினார்? என்றார்.

"இந்த ஆண்டுக் கொள்கையில் அப்படியேதும் திட்டம் இல்லையே" என்றேன். அஜாய்கோஷ், என்னைப் பார்த்த பார்வையில், எனக்குப் பயமாயிருக்கவே, அங்கிருந்து கிளம்பினேன்.

வந்தது தான் வந்தோம் நேரு பண்டிதரைப் பார்க்கலாம் என்று அவருடைய மாளிகைக்குப் போனேன். அவரைப் பார்க்கவோ பரிதாபமாயிருந்தது! தலையில் கை வைத்தபடி, இருந்தார். எதிரில், இந்திய உபகண்டத்துப் படம் விரித்து வைக்கப்பட்டிருந்தது.

"பண்டிட்ஜீ!" என்றேன்.

"யார், நீயா?"

"ஆமாம்! கம்யூனிஸ்டு நாடுகள் யாவும் உங்களுக்கு நெருங்கிய நண்பர்களாக உள்ளன. இருந்தும் ஆக 11-ந் தேதி, பார்லிமெண்டில் இப்படிப் பேசியிருக்கிறீர்களே!"

"அதனால் என்ன? உண்மையைத்தானே சொன்னேன்!"

"உண்மையா நீங்கள் சொன்னதெல்லாம்? அந்த உண்மையை, இங்கு புல்கானினையும் குருஷேவையும் அழைத்து வந்து ராஜோபசாரம் நடத்திய போதே சொல்லியிருக்கலாமே!"

"சர்வதேச விவகாரங்களில் சிக்கி உழல, ராஜதந்திரம் அதிகமாகத்தேவை. அது பற்றி உனக்குப் புரியாது".

"ஒரே ஒரு கேள்வி!", என்றேன்

"என்ன?"

"பூனாவுக்கு இரண்டு வாரத்துக்கு முன்பு போனபோது கம்யூனிஸ்டுகளைப் பிடித்து வெளுத்துக் கட்டியதாகப் படித்தேன், பத்திரிகைகளில், உண்மைதானே?" என்றேன்.

"ஆமாம்...!" என்றார், அவர்.

நேருவின் புகழ்பாடும் ஜீவாக்களைப்பற்றி நினைத்துக்கொண்டு, ஊருக்குக் கிளம்பினேன்—காற்று அடிக்கும் திக்கில் சுழலும் காற்றுடிபோலவன்றோ இருக்கிறது, இந்திய அரசியல் நிலைமை! எதையும் சாசுவதமென்று கூறமுடியவில்லையே!

★


நீங்கள் படித்துவிட்டீர்களா?

புத்தம் புதிய நூல்

சி. என். ஏ. தீட்டிய

# நாட்டின் நாயகர்கள்

விலை அணு எட்டு

வியாபாரிகளுக்கு 25o/o கழிவு. தனிப்பிரதி வேண்டுவோர் போதிய தபால் தலைகள் அனுப்புக.

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

# ★ கோபர்னிகஸ் ★

—புவியரசு—

கற்கால ஆதிமனிதன் நாகரீகத்தின் முதற்படியில் அடியெடுத்து வைத்த நாளில், அவன் தன் வாழ்க்கைக்கான தேவைகளைச் சேர்க்க செலவிட்ட நேரம் போக மிகுந்த நேரங்களில் தன் கண்களுக்குப் புலப்படும் பல பொருள்களையும், உயிர்களையும், அவைகளின் இயக்கங்களையும் அறிய அவாக்கொண்டான்,

அவனுக்கு ஒளிதரும் ஆதவனும், குளிர்தரும் மதியும், இரவும் பகலும், கோடையும் மாரியும் இன்ன பிறவும் புரியாத புதிராக இருந்தன.

எனினும், வெப்பமும் தட்பமும் தரும் கதிரவனும் சந்திரனுமே அவன் ஆராய்ச்சியின் முக்கிய இடம் பெற்றன. நாட்கள் வருடங்களாகி நூற்றூண்டுகளாகக் கறைந்தன; கற்கால மனிதன் பொற்காலத்தவனுகி இயற்கையோடு இயைந்து வாழக் கற்றுக்கொண்ட புதிய மனிதனுனன்.

இப்போது அவனுக்கு அவனைச் சூழ்ந்துள்ள கடலும், காற்றும், கதிரவனும் குளிர்மதியும் கடவுளர்களாகக் காட்சியளித்தன. அக்காலச் சூழ்நிலையில் அவனுல் அவ்வளவே உணர முடிந்தது.

பொற்காலம் முன்னேறி புது உலகம் பூத்தது. தனிமனிதன் பலராகி கிராமம் நகராகி, நகர் காக்க அரசுண்டாகி, அதன் ஆணையின்கீழ் நடக்கும் அறிவுண்டாகி, காட்டு வாழ்க்கை நடத்திய மனிதன், வீட்டு வாழ்க்கையில் ஈடுபட்டபோதுதான் அவன் ஆராய்ச்சி ஓரளவு உருவாக ஆரம்பித்தது.

குன்றின்மேல் நின்று குளிர் நிலவு வீசும் வேளையில் நிர்மலமான நீல வானை நோக்கியவன் உழுத வயலில் விதை தெளித்தாற்போல் வானத்தில் வைரத்தூள் கொட்டிக் கிடக்கும் விந்தையையும் அவை நடுவே வெள்ளித் தட்டென வெண்ணிலவு உலாவரும் அழகினையும் கண்டு சிந்தை மட்டும் குளிர்ந்தானில்லை; சிந்தனையும் செய்யத்தலைப்பட்டான். இது வானுராய்ச்சி கருவிலே உருவான காலமாகும்.

வானுராய்ச்சி உலகில் முதலில் தோன்றியதே நைல் நதி நாகரீகமும் டிரிஜிஸ்—யூப்ரட்ஸ் நாகரீகமும் சிறந்து விளங்கிய மத்தியக் கிழக்கில் தான். மாரியற்ற பாலை சூழ்ந்த ஏகிப்துதான் அந்நாட்களில் வானுராய்ச்சிக்கு சிறந்த இடமாக விளங்கிற்று. உலகிலேயே கோளங்களை தூரதரிசினியின்றி, விஞ்ஞான முதிர்ச்சியுருத அந்த நாட்களில் மிகத்தெளிவாக அதன் இயக்கங்களை எகிப்தில் இருந்துதான் பார்க்க முடிந்தது. ஆகவே வானுராய்ச்சியே எகிப்திலிருந்துதான் ஆரம்பமாயிற்றென்பது அறிஞர்கள் முடிவாகும்.

அடுத்து ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறுண்டுகட்கு முன் திராவிடத்தோடு மூத்துக்கும் சந்தணத்துக்கும வாணிபம் நடாத்திய பாபிலோனியர்கள், (தற்போதைய ஈரான் நாட்டவர்கள்) கதிரவனும் மதியும் அதைச் சுற்றியுள்ள கிரகணங்களும் அவற்றின் அசைவுகளும் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை பல கோடுகள் போட்டு கணித முறையை மேற்கொண்டார்கள் என்பதை கடந்த நூற்றூண்டில் தோண்டி எடுக்கப்பட்ட பண்டைய நகரங்களின் சுவர்களில் காணக்கிடக்கின்றது,

அவர்கள் கோளங்களைக் குறித்து குறிப்பாக உலகின் அமைப்பு குறித்து கொண்டிருந்த முடிவு மிகவும் விசித்திரமானதாகும். பூபாகம் சுற்றிலும் கடலால் சூழப்பட்டுள்ள மோடான மலைப்பிரதேசமாகவும், அக்கடலுக்கப்பால் பெரும மலைத் தொடர்கள் வளர்ந்து ஆகாயத்தைத் தாங்கிக் கொண்டுள்ளதாகவும், சுற்றிச் சுவர் போன்றமைந்த அம்மலைத் தொடரில் உள்ள வாயில்கள் வாயில்கள் வழியே தான் ஆதவனும் மதியும், தாரகைகளும் வெளிவந்து ஆகாயத்தில் ஒளி தருகின்றன என்றும் எண்ணினர். பலர் பல கொள்கைகளை வெளியிட்டு வாதிட்டதின் மூலம் பகையும் பஞ்சமுமின்றி வளரவே பல சிறு கூட்டங்களாகப் பிரிந்து ஈஜியன், ஆசியா மைனர், இத்தாலியின் தென் பகுதி, சிசிலிபோன்ற இடங்களில் அமைந்து ஆராய்ச்சியை மேற்கொண்டனர். அவர்களே அந்நாள் "ஹெல்லன்ஸ்" என்றழைக்கப்பட்ட இந்நாள் கிரேக்கர்களாவர்.

இதுவரை, வானுராய்ச்சியில் தோன்றிவந்த இடையூறுகள் பல நீக்கப்பட்டு எளியமுறைகளில் வானை ஆராயத் தொடங்கி வெற்றி கண்ட பெருமை கிரேக்கர்களையே சாரும்.

கி. மு. 300-ம் ஆண்டில் கிரேக்கப் பெரியார் யூக்லிட் வானுராய்ச்சிக்கு வரைகோட்டு கணிதத்தை பயன்படுத்தி வெற்றி கண்டார். அதன் பின்பே வானுராய்ச்சி ஓர் புதிய திருப்பத்தையடைந்தது.

கி. மு. 6-ம் நூற்றூண்டில் உலகம் உருண்டை வடிவுள்ளது. அதையே ஆதவனும் மதியும் மற்றைய கோளங்களும் சுற்றி வருகின்றன என்ற கொள்கையைக்கூறி சிறப்புப்பெற்றூர் சாமோஸ் தீவு தந்த தகையாளர் பைதகோராஸ்.

அவர் கொள்கை நீண்ட நாட்கள் நிலைக்க வெற்றிச் செல்வர் மெக்கல்லன் மேற்கொண்ட வீரப்பயணம் வகை செய்து தந்தது. மெக்கல்லன் கப்பலில் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு உலகைச் சுற்றி மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேர்ந்ததன் மூலம் பைதகோரஸ் தத்துவப்படி உலகம் உருண்டை என்பதை நிரூபித்தார்.

அடுத்து கி. பி. 14ம் நூற்றூண்டு வரை பிளாட்டோ, அரிஸ்டாடல், ஹெராக்லிட்ஸ், அரிஸ்டார்சஸ், பிடோலிமைக் போன்ற பேரறிஞர்கள் பற்பல சிறந்த தத்துவங்களைத் தந்து மறைந்தனர்.

ஆயினும் இவர்கள் எல்லோருமே. சூரியனையும், சந்திரனையும், தாரகைகளையும் ஆராய்ந்தே நாட்களையும் மாதங்களையும் ஆண்டுகளையும் கணக்குப்போட்டார்களே ஒழிய உலக உருண்டையின் இயக்கம் என்ற அடிப்படி உண்மை உணராதாராயினர்.

உலகக் கோளத்தின் இயக்கத்தையும் அது தன்னைத்தானே ஒரு முறைச் சுற்றி ஒரு நாளையும் 365 நாட்களில் சூரியனைச் சுற்றிவந்து ஓர்ண்டையும் உண்டாக்குகிறது என்ற மாபெரும் உண்மையைநீண்ட நாட்கள் தளராத உழைப்பாலும் ஆராய்ச்சியாலும் கண்டு வானுராய்ச்சியையே அடியோடு மாற்றியமைத்து. உலகுக்கீந்ததத்துவஞானி ஆராய்ச்சி அறிஞன் கோபர்னிகஸ் என்றுல் அது மிகையாகாது.

கி. பி. 14-ம் நூற்றூண்டு உலகுக்கு ஓர் பேரறிஞனை ஈன்றளித்ததன் மூலம் சிறப்பெய்தியது. என்லாம் தோரன் நகரில் வாழ்ந்த கிராகோ நகர் பெருவணிகன் நிக்கோலஸுக்கு 1473-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19-ம் நாள் மகனுகப் பிறந்தான் நிக்கோலஸ் கோபர்னிகஸ்.

செல்வக் குடும்பத்தில் பிறந்த சிறுவன் நிக்கோலஸ் பேரறிஞர் பல்லோரிடம் பழகும் வாய்ப்புப் பெற்றுன். ஆதவனையும், மதியையும் உலகையும் பற்றி அவர்கள் கூறிய விதவிதமான கருத்துக்களை அவர்கள் சலிக்கும் வரை வினுவெழுப்பி விளக்கம் பெற்றுன்.

அறிவுத் திறனும் ஆராய்ச்சியில்

அவாவும் மிக்க கோபர்னிகஸ் பெரிய ஆலயத்தின் பாதிரியாவான் என ஆருடம் கூறப்பட்டது.

தன் பத்தாவது ஆண்டு நிறைவுக்குள் தந்தையை இழந்த கோபர் எர் மிலாந்தின் பிஷப் லூக்கான் வாக் ஸல்ரோட் என்னும் தன் மாமனின் வளர்ப்பிப் பிள்ளையானன்.

ஒரு நாள் கோபர்னிகஸ் தன்னைப் போன்று சட்டம், மருத்துவம், வானுராய்ச்சி ஆகிய முக்கலை பயின்று பட்டம் பெற்று ஆலயத் தலைவனுக ஆகவேண்டும் என்று லூக்காஸ் கனவுகண்டார்! அரும் பாடுபட்டார்.

அக்காலத்தில் கிரேக்கத்தில் மட்டுமல்லாது ஐரோப்பா முழுதுமே அனுசரித்த பொதுச் சட்டம் என்னவெனில் ஆலயங்களே அரசோச்சும் அதிகாரம் பெற்றிருந்தமையால் ஆலயப் பணிக்கு தேர்ந்தெடுக்கப் படுவோர் ஆலய அரசியற் சட்டமும், நாட்டிலே நலியும் நோயாளிகளின் நோய் போக்கும் மருத்துவமும், ஆண்டவன் திருப்பணியை வேலையறிந்து செய்ய வானுராய்ச்சியும் ஆன முக் கலையும் பயின்று பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்பதாகும்.

ஆகவே லூக்காஸ் தன் வளர்ப்புப் பிள்ளை கோபர்னிகஸை கிராகோ பல்கலை கழகத்தில் போலிஷ் நாட்டு அறிஞர் ஆல்பிரட் பிருட்செவிஸ்கியிடம் கணிதமும், விஞ்ஞானமும் பயிலச் செய்தார்.

அந்த நாட்களில்தான் யூக்லிட் தத்துவம் தந்தவரை கேட்டு கணிதக் குறிப்புகளைக் கொண்டு கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தார்.

கொலம்பஸின் அமெரிக்க கண்டுபிடிப்பின் மூலம் யூக்லிட், பைதகோரியன் தத்துவங்களே சிறந்ததும் முடிவானதுமாகும் என மக்கள் எண்ணத் தலைப்பட்டனர். ஆயினும் கோபர்னிக்கஸ் அதை ஒத்துக்கொள்ள மறுத்து அதற்கு விளக்கம் பெற நீண்ட நாட்கள் சிந்திக்கத் தலைப்பட்டார்.

கி. பி. 1490ம் ஆண்டில் போலோகின கல்லூரியில் பயின்று கோனன்லா எனும் கிருத்துவ ஆலயச் சட்டம் பயின்று பட்டம் பெற்றுர்.

'டொமினிகோ மேரியா நோவாரா வானுராய்ச்சிக் கழகத்திலும், 1500-ல் ரோமாபுரியிலும் அவர் நிகழ்த்திய ஆராய்ச்சி சொற்பொழிவுகள் உலகப் பிரசித்தி பெற்றவை யாகும், அதுவே அவருக்கு புகழேணியில் ஏறிச் செல்லும் படியாய் அமைந்தது.

இதற்கிடையில் பிஷப்லூகாஸின் பெருமுயற்சியின் பேரில் பௌரன் நகர் ஆலயத்தில் பணியாளராக அமர்த்தப்பட்டார். கோபர்னிகஸ் அவ்வாலய பிஷப்பாக வேண்டும் என்றெண்ணி லூக்காஸ் எடுத்துக் கொண்ட கஷ்டம் எழுத்தில் அடங்காததாகும்.

தான் ஓய்வு பெற்றபின் அப்பதவியை கோபர்னிகஸ் அடைய வேண்டும் ஒன்று போலந்து நாட்டு மன்னனிடம் விண்ணப்பித்தார்; மன்னருடினர். ஆனல் இறுதியில் அவர் பெரும் ஏமாற்றமடைந்து மனமுடைந்தார். அது முதல் உடல் நலிவுற்று ஓய்வு பெற்றுர்.

ஆராய்ச்சிக்கு ஆலயப்பணி ஊறு விளைவிப்பதை உணர்ந்த கோபர்னிகஸ் மருத்துவக் கலை பயில ஓய்வு வேண்டி ஆலய அனுமதி பெற்று ஆல்ப்ஸ் மலையைக் கடந்து சென்று 1501-ல் "பாடுவா" மருத்துவக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்று மருத்துவக் கலையில் குறுப்பிடத் தக்கோரில் ஒருவரானர்.

அந் நாட்களில் ஏழை எளியவர் தம் நோய் போக்கி, சீராக்க அவர் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகள், தொண்டுகள் எண்ணற்றவை.

போலந்தில் பிஷப் லூக்காஸ் வாட்சில்ரோட் மரணப்படுக்கையில் இருப்பதறிந்து பதறித் துடித்து ஓடினர். தான் பயின்ற கலைத்திறன் அத்தனையும் பயன்படுத்திபுத்துயிரளிக்எண்ணியவர் கடைசியில் தோல்வியுற்றார். கி. பி. 1512-ம் ஆண்டு மார்ச் 29-ம் நாள் லூகாஸ் உயிர்நீத்தார்.

தன் வாழ்வு செழிக்க தன்னலம் பாராதுழைத்த உத்தமர், தியாக சீலர் லூக்காஸின் பிரிவும், ஓயாத சிந்தனையும் அவர் வாழ்வில் மாற்றம் தேடவேண்டிய அவசியத்தை உண்டாக்கியது.

ஆகவே கோபர்னிகஸ் தன்னை வளர்த்த பிஷப் தன்னை எந்நிலையில் வைத்து பார்த்து, மகிழ எண்ணினரோ அப்பணியையே மேற்கொள்வதன் மூலமாவது அமைதி பெறலாம் என்றெண்ணி மீண்டும் பௌரன்பர்க் சென்று தான் விட்டுவந்த ஆலயப் பணியை மேற்கொண்டார்.

அதன் பிறகுதான் அவர் வாழ்வில் புயல்வீசத் தொடங்கிற்று. கத்தோலிக்கர்களுக்கும் கத்தோலிக்க எதிர்ப்பாளர்களான புராட்டஸ்டெண்டுகளுக்கும் இடையில் பெரும் பிளவும் பூசலும் மிகுந்து அரசியலும் கடவுட் கொள்கையும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்த நேரம் கொலையும், கொள்ளையும், போரும், ஆட்சி மாற்றமுமாக அந்தகாரம் சூழ்ந்திருந்தது.

இத்தனைக் குழப்பத்திற்கிடையே தான், தான் கண்ட உண்மையை விளக்கி, பிடோலிமிக், பைதகோரியன் தத்துவங்களை எதிர்த்து, உலகைப் பற்றியும், கிரணங்களைப்பற்றியும் கூறிவந்த கருத்துக்களுக்கு மாறுன, மிகத் தெளிவான முடிவை "வானுராய்ச்சிக் கணித விளக்கம்" என்ற கையெழுத்துப் பிரதி மூலம் வெளியிட்டார். அதுவே அவர் எதிர்பாராத வகையில் பெரும் எதிர்புக்கு ஈடு கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலையை உண்டாக்கியது.

ஆதவனும் மதியுமே உலகைச் சுற்றிவருவதாக ஜோஷுவாவின் வேதம் கூற, அதை மறுத்து உலகம் தன்னைத்தான் ஒரு நாளைக்கு ஒரு முறைச் சுற்றி 365 நாட்களில் சூரியனை ஒரு முறைச் சுற்றி வருவதாகக் கூறும் கூற்று வேதத்துக்கு மாறுபட்டது; வேதத்தை மாசு படுத்துகிறது. ஆகவே ஆணவம் மிக்க கோபர்னிகஸின் தத்துவம் மறுக்கப்படவேண்டும். அவன் ஆலயப் பணியினின்றும் நீக்கப்பட் வேண்டும் என்று கத்தோலிக்கர்கள் கூக்குரலிட்டனர்.

கோபர்னிகஸ் தத்துவம் உண்மைக்கு மாறுனது; ஒழிக்கப்படவேண்டியது என்று புராட்டஸ் டெண்டுகளும் கிளர்ச்சி செய்தனர்.

இருமுனைத் தாக்குதலுக்கிடையே தனி மனிதன் கோபர்னிகஸ் சிக்கி சீரழிகப்பட்டார்.

"ஆலயப் பணியே விலகிப்போ. ஆராய்ச்சியே என் இலட்சியம்" என்று சூளுரைத்து வெளியேறிய கோபர்னிகஸ் தன் குருதி உறையும் வரை உறுதி குலையாது ஆராய்ச்சியில் ஈடுபட்டு உலகுக்கோர் உயர்ய தத்துவத்தை உருவாக்கினர். அவர் சிந்தனை அளித்த கருத்தோவியம் "வானுராய்ச்சி தத்துவப் புரட்சி" என்ற நூலாக உருவாயிற்று.

தன் வாழ்நாள் முடிவதற்குள் அந்நூலை அச்சேற்றிவிடத் துடித்தார். ஆனல் அவர் எண்ணியபடி அந்நூல் அச்சேருமுன், நீண்ட சிந்தனையும், இடையராத ஆராய்ச்சியும், மூளைக் கொதிப்பையும், பக்கவாத நோயையும் பரிசாக அளித்து மரணத்தின் இறுதி முடிவுக்கு இழுத்துச்சென்றன.

இறுதி மூச்சு அவரை விட்டு பிரியும் நேரத்தில் அவரோடு அல்லும் பகலும் அயராதுழைத்த ஆருயிர் நண்பன் ஜோசிம் ரெடிகஸ் புரட்சி நூலை புத்தக வடிவில் அவர் மார்பில் வைத்து கண்ணீர் விட்டு கதறினன். கி. பி 1542ம் ஆண்டு மே திங்கள் 24ம் நாள் உலகுக்கு உண்மையான வானுராய்ச்சி தத்துவத்தைத் தந்த தாரகை மறைந்துவிட்டது. ஆயினும் அது விட்டுச் சென்ற ஒளி உலகமும், கிரணங்களும் உள்ளவரை மறையாத நிலைபெற்று விட்டது.

★

# திருப்புகழ்-ஒப்பாரி!

— பழி —

மகா ஜனங்களே! டாரதபுத்ரர்காள்! இன்று மகத்தான நாள்!

ஆகஸ்ட் 9! என்றவுடன், என் மனக்கண்முன் தோன்றும் காட்சியை என்னென்பேன்! இணையற்ற எழுச்சி! சுதந்திரச் சங்கநாதம்! சூருவளியோ என்று பரங்கியர் எண்ணிடத் தக்கதோர் தேசியக் கனற்காற்று வீசிய நாள்!

அடக்கு முறை வெறி நாயை ஆங்கில வெறியர்கள் அவிழ்த்து விட்டனர்; அது நம்பாரததேசத்து வீரப் புதல்வர்களைப் பயங்கரமாகத் தாக்கிற்று!

துப்பாக்கியால் சுட்டனர், எங்கிருந்தோ இங்கு வந்த எதேச்சாதிகாரிகள்.

மார்காட்டி நின்றனர், வீர இளைஞர்கள்! உயிர்தானே [போகும், போகட்டும்; உயிர் வெல்லமல்ல என்று கர்ஜித்தனர்.

உரிமைக்காகப் போராடுகிறோம் உலுத்தர்களே! சுட்டுக் கொல்கிறீர்களா? கொன்று குவியுங்கள்! துப்பாக்கியில் தோட்டா இருக்கும் வரையில் கொன்று குவியுங்கள்! சாவுக்கு அஞ்சும் பரம்பரை அல்ல சண்டாளர்களே! அடிமையாக வாழ்வதைவிட, மாண்டு மண்ணோடு மண்ணாகிப் போவது மேல் எனற கொள்கை அறிந்தவர்கள் நாங்கள். கலங்கமாட்டோம்! உன் வேட்டுச் சத்தம் கேட்டு ஓடிடும் கோழைகளல்ல! நீ கோட்டைகளைத் தகர்க்கலாம்! கொத்தளங்களைத் துளாக்கலாம், எமது நெஞ்சுஉரத்தை ஏதும் செய்திட முடியாது.

சாகப் பயந்துகொண்டு, ஓடிப் போனல் ஊரும் உலகும் பழிக்கும் என்பதுகூட அல்ல, ஒருவேளை ஐயோபாவம்கொடுமைதன் கோரப் பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டு, துரத்தும்போது வேறென்ன செய்ய முடியும், பயந்தோடிச் சென்ருன், என்று கூறிப் பச்சாதாபம் கூடக் காட்டக்கூடும், ஆனல் எமது உள்ளம் உறுத்தும், வெட்கம் வேலாகக் குத்தும், சாவுக்குப் பயந்தவனே! அடிமைத்தனம் எனும் அவமானத்தைச் சுமந்துகொண்டு உயிர் வாழ எண்ணிய உலுத்தனே! என்று மனம் சுடும்; எப்படி எம்மால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியும், எமக்கேன் அத்தகைய இழிநிலை, சுட்டுத் தள்ளு! சுதந்தரம் கேட்டனர்— சுட்டுக் கொன்றனர், தேசாபிமானிகள் சுருண்டு வீழ்ந்தனர் கீழே என்று உலகு கூறிடும்—கண்ணீர் சிந்திடும்! காட்டாட்சி நடத்துகிருய் என்பதை உலகு அறியச் செய்யும் மகத்தான வெற்றி பெறுகிறோம், உயிரை இழப்பதால்; நாட்டுக்கு அது நஷ்டமல்ல! எனவே, நாசகாலனே! சுடு! சுடு! உன்வெறியும் பசியும் தீருமளவுக்குச் சுடு! மார்பில் சுடு, மண்டையில் சுடு! ஆடவர் என்றும் பெண்டிர் என்றும் பாராதே, அனைவரையும் சுட்டுத் தள்ளு! முதியோர்களை விடாதே, குழந்தைகளைக்கொன்று விடு—பெரியவர்களாகி உன் பேயாட்சியைப் பிறகு எதிர்த்திட வருவார்கள், எனவே இப்போதே கொன்றுவிடு!

வெறியனே! உனக்குவேறென்ன தெரியும்! அன்பும் அறமும் அறிந்திருந்தால், உரிமையின் அருமையும் மனிதத் தன்மையின் மாண்பும் தெரிந்திருந்தால், நீ எமது நாட்டினை அடிமைக் காடாக்கிக் கொட்டமடித்திட மனம் இடம் தராதே!

நீதான், ஏழையின் கண்ணீரைக் கண்டே, இரக்கம் காட்டவில்லையே! உனக்குத்தான், மக்களை வாழச் செய்யத் தெரியவில்லையே! உனக்குத் தெரிந்தது சுடுவது! கொல்வது தானே! சுடு அப்பனே, சுடு! உன்னல் அதுதான் முடியும்!

மயிலா, குயிலா, ஆட, பாட! கழுகு, கொத்தத்தானே! வரும்! கொத்து! கொடியவனே! கொன்று போடு! சாக அஞ்சும் பரம்பரை அல்ல, பாரத புத்திரர்! என்று நமது நாட்டு வீர இளைஞர்கள் அஞ்சாது எடுத்துரைத்த நாள் ஆகஸ்ட் 9.

இந்த ஆகஸ்ட் 9-ல், நாங்களெல்லாம் சிறை சென்ருேம்!— 15 ஆண்டுகட்கு முன்பு. எனவே இந்த ஆகஸ்ட் 9-ம் நாள் இப்போது விழாநாளாகிறது!"

**தேபர்** இவ்விதமான கருத்துப்பட, திருவல்லிக்கேணி கடற்கரையில் பேசியிருக்கிருர், சென்ற கிழமை.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பரங்கியரை எதிர்த்தனர்— அடக்கு முறைக்கு ஆளாயினர்— சிறை சென்றனர்!

அதனை எடுத்துக்கூறி எழுச்சியூட்டி, காங்கிரஸ் இன்று அரசாள்வதற்கு உரிமையும் தகுதியும் இருக்கிறது, ஏனெனில் வெள்ளைக்காரனுடைய வெறியாட்டத்துக்கு இரையாகியும், சிறையில் அடைபட்டு நைந்தும், தியாகம் செய்தனர், காங்கிரசார், அதனுலே சுயராஜ்யம் கிடைத்தது; எனவே

சுயராஜ்யத்தில் ஆட்சி நடத்தும் உரிமை காங்கிரசுக்கு இருக்கிறது, என்று தேபர் வாதாடுகிறார்.

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு ஆகஸ்ட் 9-ல் பரங்கியர் செய்த படுபாதகச் செயல்பற்றி, பேசினார் தேபர் — இவர் பேசும் இந்த ஆகஸ்டில் — 9-ந் தேதி — இவர் கட்சி நடத்தும் ஆட்சியில் என்ன காண்கிறோம்!

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு ஆகஸ்ட் 9-ல், நடைபெற்ற கொடுமைபற்றிப் பேசுகிறார், தேபர், இந்த ஆகஸ்ட் 9-ல், நடைபெறுவது என்ன? என்று மக்கள் எண்ணிப்பார்க்கமாட்டார்கள்.

இதோ, இந்த ஆண்டு ஆகஸ்ட்டு 9! காட்சியைக் காண்போம்!

**ஆமதாபாத்**

**இருமொழி இராஜ்ய திட்டத்தை எதிர்த்து இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக போலீசார் மறுபடியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.**

**ஐந்து பேர் இறந்தனர் — 41 பேர் காயமுற்றனர்.**

**நேற்றும் இன்றும், நகரில் பல இடங்களில் போலீசார் சுட்டதில் இதுவரை 12 பேர் கொல்லப்பட்டனர், 200 பேருக்கு மேல் காயமுற்றனர்.**

**ஊரடங்கு சட்டம் பிறப்பித்துள்ளனர்.**

**போலீசுக்குத் துணைபுரிய இராணுவம் தருவிக்கப்பட்டிருக்கிறது.**

**தடியடிப் பிரயோகம் செய்தனர்.**

**கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசினர்.**

## ஆகஸ்ட்டு 9 — சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் (தரப்பட்டுள்ள கணக்குப்படி) 12—காயமுற்றவர்கள் 200க்கு மேல்!

போலீசும் பட்டாளமும் சேர்ந்து மக்களை அடக்க, முற்பட்டிருக்கிறது, 1956, ஆகஸ்ட் 9-ல் ஆமதாபாத்தில்.

பதினைந்தாண்டுகளுக்கு முன்பு ஆகஸ்ட் 9-ல் என்ன வீர தீரமாகச் சுதந்திரக் கிளர்ச்சி நடைபெற்றது தெரியுமா? பரங்கியர் எப்படிப்பட்ட அடக்குமுறைத் தர்பார் நடத்தினர் தெரியுமா? என்று தேபர் பேசுகிறார்.

தேபர் பேசும்போது ஆமதாபாத்தில் பன்னிரண்டு பிணங்கள்; காங்கிரசாட்சி அவிழ்த்துவிட்ட அடக்குமுறைக்குச் சான்று கூறுகின்றன; நடைபெறுவது எத்தகைய ஆட்சி என்பதைக் காட்டிக் கொண்டிருக்கின்றன!

ஆட்சியின் நாற்றம் ஆமதாபாத்தில் தெரிகிறது!

சென்னை கடற்கரையில், 'அன்றொரு நாள்' பாடுகிறார், தேபர்!

ஐயோ! அம்மா! அட மகனே! என் உயிரே! அப்பா! அப்பா!— என்று அழுகுரல் கேட்கிறது, ஆமதாபாத்தில் ஆகஸ்டு 9-ல்; சென்னை கடற்கரையில் தேபர் பேசுகிறார், "கேளுங்கள் தேசமகா ஜனங்களே! பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பாவிப் பரங்கியின் ஆட்சியிலே பாரத தேசத்தில் நடைபெற்ற அடக்கு முறையின் கோரத்தை கூறுகிறேன்......" என்று காலட்சேபம் செய்கிறார்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு பாரத புத்திரர் நடத்தும் இந்த ஆட்சிபற்றி, மக்கள் தலைவர்கள் என்ன பேசப்போகிறார்கள் என்பதுகூடக் கிடக்கட்டும்.

இப்போது, இந்த ஆட்சிபற்றி, மக்கள் என்ன பேசுகிறார்கள்?

மாதத்துக்கோர் படுகொலை நடந்து வருகிறது!

ஒவ்வோர் கிளர்ச்சியின் போதும் இரத்த ஆறு ஓடுகிறது!

துப்பாக்கி தூக்காத நாளே காணோம்! கொன்று குவிக்கிறார்கள்! சுட்டுத் தள்ளுகிறார்கள்!! இப்படி ஒரு ஆட்சியா? இப்படிப்பட்ட ஒரு ஆட்சியைக் காணவா, சுயராஜ்யப் போர் நடத்தினோம்— என்று இன்று மக்கள் பேசாமலிருக்க முடியுமா?

அந்த நிலையிலுள்ள மக்களை அழைத்து வைத்துக்கொண்டு தேபர் பிரசங்கம் செய்கிறார், "அந்தக் காலத்திலே நாங்களெல்லாம் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்தோம் தெரியுமா?" என்று.

இப்போது நடத்தும் அடக்குமுறை ஆட்சியைவிட அல்லவா கொடுமை தரும், பழங்காலப் பிரதாபம் பற்றி, கொடுமைபுரிபவர்களே பேசுவது-கேட்டால்.

எனினும், பேசுகிறார்!!

மக்களோ சுட்டுத் தள்ளப்படுகிறார்கள்!!

தலைவர்கள் சிறை சென்றதையும், தடியடிக்கு ஆளானதையும், துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதையும், கூறிக் கூறி, மக்களிடம் 'பிரதாபம்' பேசிக்கொண்டிருந்தால், சொக்கிப் போவார்கள்-சோற்றுக்கு வழி செய்துதர முடியவில்லையே இந்த சர்க்காரால் என்பதையும் மறந்து—பாபம், சிறை சென்றவர்கள், தடியடி பட்டவர்கள், துப்பாக்கிக்கு மார் காட்டி நின்றவர்கள் என்று புகழ் பாடி மகிழ்வார்கள் என்றல்லவா இன்னமும் நம்புகின்றனர், தேபர் போன்றோர்.

பேசிக்கொண்டிருக்கும் நேரத்திலேயே அல்லவா, பிணம் விழுகிறது, வேறு இடத்தில் — பேயாட்சி என்று கூறப்படும் பரங்கியராட்சியில் அல்ல — நேரு ஆட்சியில்.

பஞ்சாப் படுகொலை! ஜெனரல் டயர் செய்த கொடுமை! என்று எத்தனை காலத்துக்குப் பேசி மக்களை ஏய்த்திட முனைவது.

இப்போது,பம்பாயில் படுகொலை, பஞ்சாபில் சித்திரவதை, ஆமதாபாத்தில் அடக்குமுறைத் தாண்டவம் என்று அடுக்கடுக்காக அல்லவா கிளம்புகிறது.

பம்பாய்—பஞ்சாப்—ஆமதாபாத் — மூன்று இடங்களிலும் நடைபெற்ற அடக்குமுறைக் கொடுமைகள், பயங்கரமானவை. மாதத்துக்கு ஒன்று என்று திட்டமிட்டுச் செய்யப்படுவதுபோல, மூன்று மாதங்களில் இந்த மூன்று இடங்களிலும் அடக்குமுறை தன் வெறியைக் காட்டிற்று.

**இதே மூன்று மாதங்களில், உலகில் (இராணுவம் மோதிக்கொள்ளும் இடங்களில் தவிர) நாகரீக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் எந்த நாட்டிலாவது, இத்தனை பிணங்கள் விழுந்தனவா? சர்க்காரின் துப்பாக்கிக்கு இத்தனை மக்கள் பலியாயினரா?**

காரணம் ஆயிரம் கூறலாம்— டயர் கூறுமலா இருந்தான்—எந்த வெறியன்தான் காரணம் காட்டாமலிருப்பான் — இப்படிப்பட்ட 'அடக்குமுறை நிலைமை' வேறு

எந்த நாட்டில் ஏற்பட்டிருந்தாலும், அந்த ஆட்சி கவிழ்ந்திருக்கும்.

இங்கோ தேபர், பதினைந்து ஆண்டுகட்கு முன்பு நடைபெற்றது என்ன தெரியுமா என்று 'திருப்புகழ்' பாடுகிறார், கனதனவான்கள், நடைபெறும் ஆட்சி எவ்வளவு நல்ல ஆட்சி தெரியுமா என்று பேசிக் 'காவடிச் சிந்து' பாடுகிறார்கள், மக்களோ, 'ஒப்பாரி' வைத்து அழுகிறார்கள், பாவிகள் சுட்டுக் கொல்கிறார்களே! என்று. ஜாலியன்வாலா படுகொலை என்பது உலகெங்கும் எடுத்துரைக்கப்பட்டு விட்டுள்ள சம்பவம். ஜாலியன் வாலாவில் ஜெனரல் டயர் செய்த கொடுமை பற்றிப் பேசாத காங்கிரஸ்காரர் கிடையாது — அது கேட்டுத் துக்கிக்காத ஊர் கிடையாது.

அந்த டயர், பாஞ்சாலப் படுகொலையன்று 1600 ரவுண்டுகள் சுட்டானாம்.

பம்பாயில் நடைபெற்ற கலவரத்தின்போது, மொரார்ஜிதேசாய், 2500 ரவுண்டுகள் சுட்டிருக்கிறார், என்று கணக்குத் தருகிறார்கள்.

வெட்கம் காணோம். வேதனை எழக் காணோம், தேபருக்கு!!

இந்த இலட்சணத்தில் பேச வேறு வருகிறார், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, பரங்கியன் என்ன செய்தான் தெரியுமா, என்று.

தேபர் திருப்புகழ் பாடுகிறார், தெருவெல்லாம் இரத்தம் ஓடுகிறது, காங்கிரஸ் ஆட்சியில். ஆகஸ்ட்டு 9-ம் நாளுடன் நின்றுவிடவில்லை; பத்தாம் நாள் பேசுகிறார், மறுநாளும் மற்றோர் தலைவர் பேசுகிறார் குடியரசுத் தலைவர் வருகிறார், காந்திய நெறிபற்றிப் பேசிப் புகழ்கிறார். ஆமதாபாத்திலேயோ பனிரண்டு இருபதாகிறது—நாள் தவறாமல் துப்பாக்கி துரைத்தனம் நடத்துகிறது — மக்களைச் சுட்டு வீழ்த்துவதிலே வேலை நிறம்ப ஏற்பட்டுவிட்டதால் போலும், கீழே விழும் பிணங்களின் கணக்கு எடுப்பதில்கூட அவ்வளவு அக்கரை காட்டப்படவில்லை.

ஆகஸ்ட்டுபதினைந்து! 'ஜனகணமன' பாடுவதற்கும், கொடி வணக்கம் செய்வதற்கும், பள்ளிப் பிள்ளைகளுக்கு இனிப்புப் பண்டம் தருவதற்கும், திட்டம் இருக்கிறது — மக்களைச் சுட்டு வீழ்த்துவதோ தயக்கமின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது,

பரங்கியர் படுத்திய பாடு பற்றி பேசிடபேச்சாளர்கள் வருகிறார்கள் மக்கள் தினத்தாளில் காண்பதோ காங்கிரசாட்சியிலே எத்தனை பேர் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள் என்ற செய்தியாகத்தான் இருக்கிறது.

**"குசராத்தில் இப்போது நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள், இந்தியாவின் மற்றப் பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு ஓர் அறிகுறியானல், தளபதி டையரினுடைய அக்கிரமச் செயல்கள் ஒன்றுமேயில்லை என்று கூறும்படியாய் இருக்கிறது. மேற்போக்காகப் பார்ப்பதற்கு இது மிகைப்படக் கூறியதாகத் தோன்றலாம், ஆனால் இது சொல்லுக்குச் சொல் உண்மையானதும், உயர்வு நவிற்சியில்லாதது்ம் உள்ளதை உள்ளபடி கூறுவதுமான கருத்தாகும். இதைச் சட்டத்தின் ஆட்சி என்றும், அமைதியைப்பாதுகாக்கும் அரசு என்றும் கூறுகிறார்கள்" — என்று 26-ஆண்டுகளுக்கு முன் 1-5-30 ;யங் இந்தியாவில் காந்தியார் எழுதினார். அப்போது உப்பு சட்டத்தை எதிர்த்து அறப்போர் நடைபெற்றது. போலீஸ் தாக்கியதன் காரணமாக 7-தொண்டர்கள் காயமுற்று மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார்கள். வேறு 28 தொண்டர்களும் காயமடைந்தனர். குசராத்தில் 35தொண்டர்கள் காயமுற்ற செய்தியைக் கேட்ட காந்தியடிகள் ஆட்சியின் போக்கை இதுபோலக் கண்டித்தார்.**

இப்போது காந்தியார் திருப்புகழ் பாடுவோரின் ஆட்சியில் 600 பேர் கைதாயினர் — 200 பேருக்குக் காயம் 20-பேர் மாண்டனர் என்று கணக்கு தரப்பட்டிருக்கிறது.

பாடுகிறார்கள் திருப்புகழ்! 'ஒப்பாரி' கேட்கிறது நாட்டில்.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த முறையில் நடந்துகொள்ள நேரிடுகிறது என்பதும் விளங்காமற்போகாது. நமக்கென்று ஏற்பட்டுள்ள வரலாற்றினைக் கூர்ந்து பார்த்தால், நாம் ஏன் அந்த முறையினை வெறுத்தொதுக்கிவிட்டோம் என்பதும் புரியும்.

**ஏமாற்றம், தம்பி, எரிச்சல் தரும்— திருப்தி, மகிழ்ச்சியையும் அமைதியையும் தரும்.**

நமக்கு இன்னது கிடைக்க வேண்டும் என்று ஆவலாக எதிர்பார்த்து, அதை அடைவதற்காகப் பாடுபட்டும், அது கிடைக்காமற்போனால், ஏற்படும் ஏமாற்றம் ஒருவகை.

அதனினும்கொடியது, கிடைக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தது நமக்குக் கிடைக்காமற்போனதுடன், மற்றவருக்கு, அதிக சிரமமின்றி, கிடைப்பதைக் காணும்போது ஏற்படும் ஏமாற்றம்!

அந்த நேரத்தில் மனதில் மூண்டுவிடும் எரிச்சல், மனதை நிச்சயமாக எரிமலையாக்கிவிடும்— பிறகு சொல்லவா வேண்டும்.

பொறுக்கிப் பசங்க
போக்கிடமத்ததுக

என்ற 'பாஷை' மளமளவென்று பிறக்கும். இது சகஜம்.

திராவிட முன்னேற்றக் கழகம்' துவக்கியதிலிருந்து தம்பி, நாம் எதில் ஏமாற்றம் அடைந்தோம், எரிச்சல் கொள்ள?

திக்குத் தெரியாத காட்டில் துரத்திவிடப்பட்ட பாலகர்கள் போல், மேல்வேட்டியை உதறிப் போட்டுக்கொண்டு, உழைத்தது வீணுச்சே, இனி உலகு என்ன வழி காட்டுகிறதோ பார்ப்போம் என்ற ஏக்கத்துடன் முதலாளியின் மாளிகையைவிட்டு வெளியேறும் உழைப்பாளியைப்போல, அன்று நாம் வெளியேறினோம்.

வெளியேறினோம் என்பதைக் கூட உலகு ஒப்பக்கூடாது என்று, வெளியேற்ற எல்லா ஏற்பாடும் செய்துவைத்திருந்தேன், திருட்டுப்பயல்க, எப்படியோ அதைத் தெரிந்துகொண்டு, தலைதப்பினால்

தம்பிரான் புண்யம் என்று ஓடி விட்டார்கள், என்று தூற்றினர். துக்கத்தைச் சுமந்துகொண்டு, துணைக்கு வருவோர் யார் இருக்க முடியும் என்று ஏதும் தெரியாமல், வெளியேறினோம்.

அரசியல் என்றால் என்ன சாமான்யமா? அன்னக் காவடிகளெல்லாம் பொது வாழ்வில் நிலைத்திருக்க முடியுமா? இதுகளுக்கு வாழ்வு இருண்டுவிட்டது. பபூன் போல் பல்புகளாகிவிட வேண்டியதுதான்—சிந்துவார் யார் இருக்கப்போகிறார்கள் — திகைத்துத் திண்டாடி தெருவில் சுற்றி, தேசாந்திரியாகி, ஏதாவது ஒரு கட்சியின் காலடியிலே விழுந்து பிச்சைப் பிழைப்பு நடத்த வேண்டியதுதான், என்று "வாழ்த்தி வழியனுப்பினார்கள்."

தம்பி! நாம் உருத்தெரியாமலாகிவிடவுமில்லை, உருமாறிப்போய் விடவுமில்லை, ஊர் மக்கள் நம்மை உதவாக்கரைகள் என்று ஒதுக்கி விடவுமில்லை. வளர்ந்து நிற்கிறோம்.

எப்படி இது அவர்களுக்கு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தராமலிருக்கும்.

தம்பி! நாம் மேற்கொண்டுள்ள காரியம் எளிதானது, நமக்கு அந்தக் காரியத்தை முடித்துக் காட்டும் ஆற்றல் ஏராளமாக இருக்கிறது என்ற எண்ணம் நம்மில் யாருக்கும் எழுந்ததில்லை. எனவேதான், நம்மால் எவ்வளவு சாதாரண வெற்றி பெற முடிகிறபோதும், மனதுக்கு ஒரு அலாதியான மகிழ்ச்சி பிறக்கிறது.

சுடு சோறும், சுவையான குழம்பும், பாட்டாளிக்கு இனிக்கிறது, பாதம் அல்வா பதிர்பேணி பங்களாவில் கசப்பாகக்கூட ஆகிவிடுகிறது. நாம், அரசியலில், பொது வாழ்வுத் துறையில், தீண்டப்படாதாராக-ஒதுக்கப்பட்டோராக-விரட்டப்பட்டவர்களாக— ஆக்கப்பட்டவர்கள்! எனவே நமக்குக் கிடைக்கும் மிகச் சாமான்யமான வெற்றியும், மனதுக்கு மகிழ்ச்சியூட்டுகிறது! மேலும் பல வெற்றிக்கான வாய்ப்பினையும் வலிவையும் தருகிறது. இவ்விதமின்றி நாம், நமது ஆற்றலைக் குறித்து மிக அதிகமான கணக்கிட்டுக்கொண்டு, நாம் சாதிக்க வேண்டிய காரியம்பற்றி மிகக் குறைவான கணக்கிட்டிருந்தால், எத்துணை மனவேதனை ஏற்பட்டிருந்திருக்கும், தெரியுமா!

நமக்கு இருக்கும் திறமையும் குறைவு, அதைவிடக் குறைவு நமக்கு அமைந்துள்ள வாய்ப்புகளும் வசதிகளும்; நாம் எதை எதை மாற்ற வேண்டும் என்று பாடுபடுகிறோமோ, அவைகளைக் கட்டிக் காப்பவர்களும், அதனால் பலன் பெறுபவர்களும், அறிவிலிகளுமல்ல, ஆற்றல் அற்றவர்களுமல்ல, அவர்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பும் வசதியும் நமக்கு உள்ளதைவிட மிக அதிகமானது, எனவே, நமது பணியின் பலன், வேகமாக உருவெடுக்க முடியாது என்பதை உணருகிறேன், எனவே உள்ளத்திலே, அமைதியேகூட ஏற்படுகிறது—சிறு உருவில் பலன் தெரியும்போதும் மகிழ்ச்சி பிறக்கத்தான் செய்கிறது. நம்மால் இவ்வளவாவது முடிகிறதே என்ற மகிழ்ச்சி!

இதே நிலையில்தான் பெரியார் இருக்கவேண்டும் என்று நான் கூறவில்லை — கூறும் அளவுக்கு நான் குணம் கெட்டுப்போனவனல்ல.

அவசரப்படவும் ஆத்திரப்படவும், அவருக்கு உரிமை இருக்கிறது. ஏனெனில் அவர் ஒரு அரை நூற்றாண்டுக் காலமாக உழைத்து வருகிறார், இவ்வளவு உழைப்புக்குப் பிறகும், கண்ணுக்குத் தெரியும் பலன் சிறிய அளவாக இருப்பது கண்டு, அவர் சலித்துக்கொள்கிறார்.

ஆனால், அவர்மட்டுந்தான் அந்த உரிமை பெற்றிருக்கிறாரே தவிர, அவருடன் பணியாற்ற அவ்வப்போது அவருக்குக் கிடைப்போர்கள், அதே அளவுக்கு உரிமை பெற்றவர்களாகிவிட முடியாது.

சர்ச்சிலுக்கு ஈடன் கிடைத்தார் —பெரியார் எந்த ஈடனையும் பெற்றதில்லையே!

கிடைப்பவனெல்லாம், காட்டிய வழி நடக்க, போட்ட கோட்டை மீறாதிருக்க, மாட்டிய கடிவாளத்துக்கு ஏற்றபடி திரும்ப, பயிற்சி பெற்று, படையில் இருக்கிறார்கள் —ஏதோ ஓர் கட்டம் வருகிறது— பிய்த்துக்கொண்டு ஓடுகிறார்கள், அல்லது பிய்த்தெறியப்படுகிறார்கள்,

ஜீவாவும் இராமநாதனும், விசுவநாதமும் பாலசுப்பிரமணியனும், சாமி சிதம்பரனாரும் வல்லத்தரசும், நீலாவதியும் இராமசுப்பிரமணியமும், பொன்னம்பலனாரும் பாண்டியனாரும், புகழுடன் விளங்கி, இரத்தினங்களாய், மாணிக்கங்களாய், ஒளிவிட்டு வந்து, பிறகு வீசி எறியப்பட்டுப்போனார்கள்.

நான் இப்போது, காரணங்களை ஆராயவில்லை; பழய கதையையும் கிளறவில்லை. பெரியாரின் பெரும் படை வளர்ந்து வருவதற்குப் பதிலாக, எப்படி அடிக்கடி வதைபட்டு சிதைக்கப்பட்டு, மாற்றி அமைக்கப்பட்டு வந்திருக்கிறது, என்பதைக் காட்டமட்டுமே இதைக் கூறுகிறேன்; குற்றம்சாட்ட அல்ல.

நண்பர் குருசாமிக்கே இது 'மூன்றாவது ஜென்மம்' என்று கருதுகிறேன், — இருமுறை அவரும் 'புளித்தவராகி' விட்டவர்தான்.

விலகியவர்கள் — விலக்கப்பட்டவர்கள் — அந்தந்த 'கால கட்டத்துக்கு' ஏற்றபடி, கசப்பும் காரமும் காட்டியும், கண்ணீர் வடித்துக் கை பிசைந்து நொடித்துப்போயும், வேறு கட்சி தேடிக்கொண்டும் அல்லது வாழ்க்கைக் கலையில் ஈடுபட்டும், பல்வேறு வழியில் சென்றுவிட்டனர். நாம்மட்டுந்தான், தம்பி, கொள்கையை மாற்றிக்கொள்ளாமல், மாற்றாருடன் கூடிக் குலவிடாமல், முக்காட்டு மூலைக்குச் சென்றிடாமல், வீண் வீம்புக்குப் பலியாகாமல், கலத்திலிருந்து வீசி எறியப்பட்டவர்கள், சுழலுக்கும் சுறாவுக்கும் தப்பி, தெப்பத்தின் துணைகொண்டு எங்கோர் திட்டுதேடி அலைந்து, அங்கு தங்கி, சிறியதோர் சிங்காரத் தோணி அமைத்துக்கொண்டு, அதிலேறிப் பயணம் செய்

வோர்போல நமது பயணத்தை, அதே பாதையில், தொடர்ந்து நடத்துகிறோம்.

நம்மீது எரிச்சலும் பகையும் இந்த அளவுக்கு ஏற்படுவதற்கான காரணம் இதுதான்.

"விரோதியாகு!" என்கிறார்கள், "ஐயா! அது எப்படிச் சாத்தியமாகும். எனக்கு அத்தகைய கெடுமதி கிடையாது. எம்மால் எந்த அளவுக்குச் செய்யமுடிகிறதோ அந்த அளவுக்குக் கொள்கைக்காகப் பணியாற்றி வருவோம்" என்று நாம் கூறுகிறோம்; கோபம் அதிகமாகிறது. என்னென்னவிதமாகவெல்லாம் தமது பகையைக் காட்டிக்கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றனவோ, அந்த முறையில் நடந்துகொள்கிறார்கள்—இன்றைய அணிவகுப்புக்குக் கர்த்தாக்களாகிவிட்டவர்கள்.

அவர்கள் மிகப் பெரிய சந்தர்ப்பம், நம்மைத் தீர்த்துக்கட்ட, அடித்து நொறுக்க, என்று எண்ணிக்கொண்டிருப்பது, அடுத்து வரும் தேர்தல்.

"பயல்கள் சினிமா நாடகம் எழுதிக் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலில், அதைஎல்லாம தொலைத்துவிட்டு, கையில் பிச்சைத் தட்டு ஏந்திக்கொண்டு அலையப்போகிறார்கள், அதை இந்தக் கண்ணால் பார்த்துவிட்டுத்தான..." என்று கூறினராம், நீண்டகால நோன்புக்குப் பிறகு, கழகத்தின் நடுநாயகமானவர்!

பார் தம்பி, அவர்தம் கண்களுக்கு, எத்தகைய விருந்து வேண்டுமென்று விரும்புகிறார்.

கண்ணால் காண வேண்டிய விருந்து எத்தனை எத்தனையோ இருக்கிறது—எண்ணத்தில் அவைகளைக் கொள்ளக்கூடாதா!

இராஜ பவனத்தில் நேரு பண்டிதர் கவலையுடன உலவுகிறார், போடு, கையொப்பம், திராவிட நாடு பிரிவினைக்கு இப்போதே போட்டாக வேணடும், இல்லையானால், நாளையத் தினம் பகல் பனிரண்டு மணிக்கு சௌகார் பேட்டை கொளுந்தப்படும்—இதோ தீக்குச்சி, என்று அவரிடம் காட்டுவதுபோலவும், அது கண்ட அவர், கையொப்பம் போடுவது போலவும், கடற்கரையில் கூடியுள்ள கால் கோடி மக்கள் கொண்ட கூட்டத்தில், "பெரியாரின் தளபதி பிரியத்துக்கும் நம்பிக்கைக்கும் உரிய தளபதி என்ற முறையிலே, இதோ நான் அவர் சார்பில் திராவிட நாடு திட்ட வெற்றி பற்றிய பிரகடனத்தைப் படிக்கிறேன். கேட்டு இன்புறுக" என்று படித்துக் காட்டுவதுபோலவும் நடுநாயகருக்குத் தோன்றக் கூடாதா?

ஐயோ! அம்மா! பிச்சைபோடுங்க என்று நாம் பிச்சை எடுக்கிற காட்சியைக் காணத்தான், கண்கள் விரும்புகிறதாம்!

பகற்கனவு காண்பது என்று தீர்மானித்தான பிறகு, கொஞ்சம் நல்ல கனவாவது காணக்கூடாதா!

தேர்தலில் ஈடுபடும் நம்மை திக்குமுக்காடச் செய்து, தோற்கடித்துவிட்டு, அந்தத் தோல்வியால் நாம் எலும்புந் தோலுமாகி, பிறகு இருக்குமிடம் தெரியாமல் போய்விடுவோம் என்று அன்பர் ஆசைப்படுகிறார்.

தேர்தல் வருகிறது, ஈடுபடப் போகிறோம், வெற்றி! வெற்றி! எங்கும் வெற்றி! — என்று வெறிகொண்டு நாம் அலைந்து, மிக அதிகமாகப்பலனை எதிர்பார்த்து இந்தத் தேர்தலில் ஈடுபட்டால், தோல்வி ஏற்பட்டால் நாம் துவண்டு போவோம், துளைக்கப்பட்டுப போவோம். ஆனால், தம்பி! நாம், நம் வலிமை, மாற்றான் வலிமை, நமக்கிருக்கும் வாய்ப்பு, நாட்டிலே உள்ள நிலைமை, ஆகிய எல்லாம் அறிந்து, அதிகம் எதிர்பார்க்காமல், நம்மால் பொதுத் தேர்தலில் ஈடுபட்டு, காங்கிரஸ் ஒரு சர்வாதிகாரத்தை ஏற்படுத்த விடாமல் தடுக்கும ஜனநாயகக் கடமையைச் செய்யமுடிகிறதே, அது போதும், என்ற உளளத் தூய்மையுடன, திருப்தியுடன் ஈடுபட இருக்கிறோம். ஆகவே, அன்பர் ஆவலாக எதிர்பார்க்கும் காட்சி கிடைக்காது.

எத்தனை எத்தனையோ காட்சிகளை அவர், பாபம், காண விரும்பினார். முடியத்தான் இல்லை.

திருமணத்தன்று பெரியார் மாளிகையில் சத்தியாக்கிரகம் நடத்தி ஊரே திரண்டுவந்து கூடி நின்று வேடிக்கை பார்க்கும்காட்சியைக் காண விரும்பினார்.

நான்தான் அது எவ்வளவு அநாகரீகமான போக்கு என்பதை எடுத்துரைத்தேன்.

இலட்சக்கணக்கான மக்கள் கூடிடும் கூட்டத்தில், கண்டனம் தெரிவித்து ஆவேசமாகப் பேச விரும்பினார். சுவரொட்டியே தயாராயிற்று. நான்தான், நாடு நம்மைத்தான் நிந்திக்கும் என்றேன்.

இன்னும் அவர் காண விரும்பிய காட்சிகள் பலப் பல. ஒன்றுக்கொன்று தரத்தில்மட்டமானவை.

இப்போது, நாம் பிச்சை எடுப்பதைக் காண விரும்புகிறாராம். என்ன அற்புதமான மனமடா, தம்பி, உலகில் இன்னும் ஒரு பத்து பேருக்கு இப்படிப்பட்ட மனம் இருந்தால் போதுமல்லவா!!

தேர்தலில் நமக்குப் பெரிய விபத்து நேரிட்டுவிடப்போகிறது என்று இவர் கணக்கிடுவதற்குக் காரணம் என்ன என்று எண்ணுகிறாய்?

காமராஜர் திராவிடச் சமுதாயக் காவலராம் — எனவே அவர்மீது 'தூசு' விழுந்தால், இவருக்குக் கண்ணில் மிளகாய்ப் பொடி பட்டது போலவாம்!

காமராஜர்மீது இந்தக் கனிவு வரக் காரணம் என்ன?

**"தீண்டாமை இன்னும் நீடிப்பது ஜனநாயகத்துக்கு விடப்படும் சவாலாகும்!", என்று டில்லி தபால் தந்தி இலாகா அமைச்சர் ஜகஜீவன்ராம் நாகபுரியில் 12ந் தேதி பேசுகையில் கூறியுள்ளார்.**

திராவிட நாடு தேவை

என்று வடநாட்டுத் தலைமையிடம் வாதாடினாரா என்றால் அதெல்லாம் இல்லை, ஒரே ஒரு காரணம் தான், அவருக்கு உத்யோகம் கொடுத்தார், இவருக்குக் கொடுத்தார் என்ற பட்டியல்.

காமராஜர் மக்களுக்கு என்ன செய்தார்? என்று கேட்பதல்லவா அரசியல் பிரச்சினை என்பீர்கள், தம்பி, இந்த நண்பர், வீடு சுகப்பட்டால் நாடு சுகப்பட்டது என்ற அளவுக்கு அரசியலின் நேர்த்தியை உயர்த்திக்கொண்டு விட்டார்.

**தமிழனுக்குத் துளியாவது நன்றி காட்டும் புத்தி இருந்தால், நன்றி காட்டும் தமிழன் ஒருவனாவது இருப்பானானால், காமராஜர் சர்க்காரை எதிர்ப்பானா!!**— என்று கேட்டாராம், பெரியார் இந்தப்போக்கை ஆதரிக்கிறார் என்ற ஒரே காரணத்துக்காக.

தம்பி, ஒரு போக்கு கொள்வது என்று துணிந்த பிறகு, முன்பின் யோசிக்காமல், பொருத்தம் அருத்தம் தேடாமல், விறுவிறுப்பாகப் பேசுவது, ஒரு விதமான பிரசாரமுறைபல்லவா. அந்தமுறைப்படி, காமராஜர் ஏதோ, திராவிட மக்களுடைய நீண்டகாலத் தவத்தின் பயனாக முதலமைச்சராக வந்து, கேட்கும் வரங்களை எல்லாம் கொடுத்தவர் போலச் சித்தரித்துக் காட்டுகிறார்கள்.

**இனித் தென்னாட்டில் ஒரே ஒரு பிரச்னைதான்.**

**"நீ திராவிட நாடு பிரிவினையை ஏற்றுக்கொள்கிறாயா?**

**"ஆம்" என்றால் என் நண்பன். 'இல்லை' என்றால் எனக்கு எதிரி.**

**இதுதான் இனி. இதில் தயவு, தாட்சணியம் கிடையாது. முன்பின் நட்பு கிடையாது. மதம் ஜாதி, மொழி, உறவு கூடக் கிடையாது."**

எப்படித் தம்பி, பொறிபறக்கிற தல்லவா?

வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பார்களே அதுபோல இல்லையா.

யாருடைய மணிமொழி? விடுதலை தான்!!

திராவிட நாடு பிரிவினையை ஒப்புக்கொள்ளாதவருடன், அவர் யாராக இருந்தாலும் சரி, ஒட்டு இல்லை உறவு இல்லை! விட்டுத் தள்ளு! என்கிறார்.

வீரம் கொப்பளிக்கிறது—கொள்கை ஆர்வம் கொழுந்து விட்டெரிகிறது, அல்லவா?

அவரே இன்று நன்றிகெட்ட ஜென்மங்களா! காமராஜர்—ஐயோ காமராஜர்மீதா எதிர்ப்பு — பாவிகளா, நீங்கள்பிடிசாம்பலாய்ப்போக! அவரை எதிர்ப்பதா; அவர்தான் மீண்டும் முதல் மந்திரியாக வேண்டும்—மூன்றாவது தடவையும் அவர் தான் வரவேண்டும்- அவர் விரும்புகிறவரையில் அவரே தான்—முதல் மந்திரிப் பதவி என்ற ஒன்று இருக்கும்வரையில் அவர்தான் வர வேண்டும்! — என்று முழக்கமிடுகிறார்.

ஏன்? திராவிட நாடு பிரிவினையைக் காமராஜர் ஏற்றுக்கொண்டாரோ? இல்லை, இல்லை, அவரிடம் அதுபற்றி இவர் கேட்கக்கூட இல்லை! எனினும் அவர்தான் முதல் மந்திரியாக வேண்டும் என்று பேசுகிறார், என்னய்யா என்றாலோ, பிச்சை எடுத்து அலையப் போகிறீர்கள் பார்! பார்! என்று சபிக்கிறார்

திக்குநோக்கித் தண்டனிட்டபடி காமராஜருக்கு இன்று ஆதரவு தேடுகிறார் நடுநாயகர். அது அரசியல் நேர்மையல்ல என்போரைச் சபிக்கிறார், கடுமையாகத் தாக்குகிறார்—பெரியாரோ, பி. ஏ. எம். ஏ. பட்டமே நான் வாங்கிக் கொடுத்தது என்று பேசுகிறார்.

தம்பி! நம்மை இவ்வளவு கேவலமாகப் பேசி ஏசுகிறார்களே என்று கவலைப்படாதே, துக்கப்படாதே. நம்மையாவது பிச்சை எடுக்கச் சொன்னார்; இதோ கேள், வேறோர் அர்ச்சனையை.

**"திராவிட, தமிழக என்ற பேரைக் கண்டு எவனாவது முகம் சுளித்தால், அவன்முகத்தில் காரித்துப்புங்கள் தனது தாய்நாட்டின், தனது இனத்தின் பேரைக் கேட்டு முகம் சுளிக்கும் துரோகியின் கூட்டுறவில் நமக்கு என்ன நன்மை இருக்கமுடியும்? இந்தச் சிறு காரியத்துக்கு இணங்காத மக்கள் எப்படி மனிதத்தன்மையும் சுதந்திரமும் பெறமுடியும்"**

தம்பி! தீப்பொறி கண்டாயா?

காரித்துப்புங்கள்! முகத்தில் காரித்துப்புங்கள்! துரோகியின் முகத்தில் காரித்துப்புங்கள்!

விடுதலையில் வந்த வீரமுழக்கம்.

எவனொருவன், திராவிடன், தமிழ்நாடு என்று சொன்னால் முகம் சுளிக்கிறானோ, அவன் துரோகி.

அவன் கூட்டுறவில் நமக்கென்னநன்மை விளையப்போகிறது என்று கேட்டது விடுதலை.

திராவிடநாடு—பூ!பூ! இதென்ன காட்டுக் கூச்சல் என்று கேட்கிறார் காமராசர்.

தமிழ் நாடு என்று பெயர்வைக்க முடியாது போ, என்று முடுக்காகக் கூறுகிறார், முதலமைச்சர் காமராஜர்.

அவருக்கு "திருஷ்டி கழித்து" ஆலம்சுற்றிப் பொட்டிட்டு, அரசாள அழைக்க, 'லாலி' பாட வேண்டுமாமே, சரியா?

அன்பன்,

அண்ணாதுரை

# உலக அரங்கில்

## எகிப்து

★

சூயஸ் பிரச்னை உலக வட்டாரத்தில் பெரும் பீதியைக்கிளப்பி விட்டிருப்பதும், பிரிட்டிஷ் சர்க்கார் சங்கநாதம் செய்வதும், அறிவோம் நாம். அப்படி ஏதாவது படையெடுப்பு நேர்ந்தால் அதைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மும்மரமாக ஈடுபட்டிருக்கிறார் நாசர். "வாலிபர்களும் வயோதிகர்களும் வருக!" என்று அழைத்து, பிரதேச சேனைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்படி ஏராளமானோர், தாமாகவே இந்தச் சேனைகளில் பங்குகொள்ள முன்வந்துள்ளனராம்.

✱

## சைப்ரஸ்

★

சுதந்திர வீரர்களான மூன்று பேரை பிரிட்டிஷ் சர்க்கார் தூக்கில் தொங்கவிட்டு விட்டது! இந்தக் கொடுமையைக் கண்டித்து நாடு முழுமையும் ஆக. 9ந் தேதி கடையடைப்பும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கிறது. இந்த மூவரின் தியாகத் தீ, சைப்ரஸ் மக்களின் இதயங்களில் மாறாத மனப் புண்ணை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறலாம்.

✱

## ஜப்பான்

★

குணஷீரி, இதுரூப் என்று இரண்டு தீவுகள் ஜப்பானுக்குச் சேரவேண்டியவையாகும். ஆனால் கடந்த போருக்குப் பிறகு இத்தீவுகளிரண்டும், ருஷியாவின் வசமே உள்ளன. இவைகளைத் திருப்பித் தங்கள் வசம் தருமாறுகோருவதற்காக ஜப்பானிய வெளிநாட்டு மந்திரி மாமோரு உதிக்மிட்சு கடந்த 10ந் தேதி மாஸ்கோவுக்குச்சென்றிருந்தார். போருக்குப் பிறகு இத்தீவுகள் தமக்கு அளிக்கப்பட்டுவிட்டதாகவும், ஆதலால் திரும்பத்தரும் பிரச்னை எழவில்லையென்றும் ரஷ்யா மறுத்துவிட்டிருக்கிறது. இது, ஜப்பானியர் மத்தியில் அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது.

✱

## டுனீஷியா

★

அண்மையில் சுதந்திரம் பெற்ற டுனீஷியா, பலதாரத் திருமணம் செய்துகொள்வதை இந்தவாரம் சட்ட விரோதமாக்கியிருக்கிறது. அதோடு மட்டுமின்றி, திருமண விஷயத்தில் பெண்களுக்கு பூரண உரிமையும் அளிக்கபபட்டுள்ளது. பெண்கள், தாய்தந்தையர் நிச்சயம் செய்யும் ஆடவர்களையே மணந்துகொள்ளும் நிர்ப்பந்தம் இருந்து வருகிறது. அங்கு 20-வயதாகிவிட்டால், தனக்குரிய கணவனை எந்தப் பெண்ணும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மறுக்கும் தாய் தந்தையர், சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் இனிமேல்.

✱

## தென் ஆபிரிகா

★

நிறவெறிக் கொடுமை கூத்தாடும் தென் ஆபிரிகாவின் அட்டூழியத்தை எதிர்க்க மாதர் திலகங்களும் முன்வந்துவிட்டார்கள். கடந்த 10-ந் தேதி பிரிடோரியா எனுமிடத்தில் 10,000 பெண்கள்கூடி சர்க்கார் காரியாலயங்களுக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். வெள்ளையரில்லாத ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தம் வசம் எப்போதும் ஒரு அடையாளப் புத்தகம் வைத்திருக்க வேண்டும் என்று அண்மையில் ஸ்டைர்டம் ஒரு கட்டளை பிறப்பித்துள்ளான், அதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தது!

✱

## அமெரிக்கா

★

வெளி நாடுகளுக்கு உதவி என்னும் பெயரால் ஆண்டுதோறும் ஏராளமான பணத்தைச் செலவழித்து வருகிறதல்லவா அமெரிக்கா, இப்படிச் செய்வது அரசியல் சட்டத்துக்கு முரணானதாகும் என்று கூறி, அமெரிக்க சுப்ரீம்கோர்ட்டு முன் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பிராக்கன் லி என்பவர்தான், சர்க்கார் மீது வழக்குப் போட்டிருப்பவர். இவர், உடா எனும் பகுதிக்கு தற்போது கவர்னராகயிருக்கிறார். ஆரம்ப முதல், அந்நிய நாடுகளுக்கு உதவி கொடுப்பதை இவர் எதிர்த்து வருகிறார், "நான் கொடுக்கும் வரி, வெளி நாட்டுக்குத்தானே போகப் போகிறது. எதற்கு நான் வரிகட்ட வேண்டும்?", என்று சர்க்காருக்கு செலுத்த வேண்டிய வருமான வரியையும் செலுத்த மறுத்துவிட்டார். சுப்ரீம் கோர்ட், என்ன தீர்ப்பு வழங்கப் போகிறதோ?

✱

## உலக பாங்கி

★

உலக பாங்கி கடன் கொடுக்கிறது! உலக பாங்கி கடன் கொடுக்கிறது!!—என்று, இந்திய தலைவர்கள், அடிக்கடி கூறுவதைக் கேட்கும்போது, ஏதோ, ஏனைய நாடுகளுக்கு அது கடன் கொடுக்க மறுப்பதுபோலவும்; இந்தியாவுக்கென்றால் ஓடிவந்து உதவுவது போலவும் தோன்றக்கூடும் பலருக்கு. உண்மை என்ன தெரியுமா? இந்தியாவுக்கு மட்டுமல்ல, ஒப்பிட்டால் கடுகுபோலத் தோன்றும் சின்னஞ் சிறு நாடுகளுக்குக் கூட கடன்தந்துவருகிறது, உலகபாங்கி.

கடந்த ஓராண்டில் அது கடன் கொடுத்துள்ள நாடுகளின் பட்டியல்:- அல்ஜீரியா, பர்மா, கொலம்பியா, ஈக்வடார், ரொடீஷியா, பின்லாந்து, கௌடிமாலா, ஹெய்தீ, ஹொண்டுராஸ், இந்தியா, ஜப்பான், லெபனன், நிகரகுவா, நார்வே, பாகிஸ்தான், பனுமா, பெரு, சயாம், தென் ஆபிரிகா, உருக்வே.

இந்த ஆண்டில், ஆப்கானிஸ்தானமும் எங்கோ ஒரு மூலையிலிருக்கும் சின்னஞ் சிறு நாடான கொரியாவும் உலக பாங்கியின் புதிய உறுப்பினர்களாயுள்ளன. இப்போது மொத்தம், 58 நாடுகள் உள்ளன. இதையெல்லாம் கவனிக்கும் போது, திராவிடநாடும் தனி நாடானால் — கடன் வாங்கித்தான் வாழ வேண்டும் என்கிற நிர்ப்பந்தமே நேர்ந்தாலும்—ஏன் இயலாது? நிச்சயம் முடியும்! அல்ஜீரியா, கொரியா இவைகளோடு ஒப்பிட்டால், ஏ, அப்பா! நமது தாயகம், எவ்வளவு பெரியது!

REGD. NO. M. 4642 போன் நெ. 15

# உணரவேண்டும்

துப்பாக்கிச் சப்தம் முழக்கியும், மக்களைச்சுட்டுக் கொன்றும், பல இடங்களில் தர்பார் நடத்துகிறது, காங்கிரஸ் அரசாங்கம்.

வெள்ளையனே கண்டு மிரள்கிற அளவுக்குச் சுதந்திர ஆட்சியில் இத்தொல்லைகள் அதிகமாக உள்ளன, மாற்றுக் கட்சிகளுக்கு.

ஆளும் கட்சி, அடுத்த கட்சிகளை அடக்குவது தான் ஜனநாயகம், அவர்கள் குரலை ஒடுக்குவது தான் தனக்கு நல்லது என்று நடக்கும் போக்கால், அதிகாரிகளுக்கும் அதிர்ச்சியும்பயமும்உருவாகிறது. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடியாவது பாய்ந்து காட்டவேண்டுமே என்கிற ஆசையால் பல அதிகாரிகளும், அதிகார வெறிக்கு இரையாக நேருகிறது. இதனால் கல்லக்குடிகளும், தூத்துக்குடிகளும்,குன்றத்தூர்களும், தம்மம்பட்டிகளும், கல்லக்குறிச்சிகளும், ஏற்படுகின்றன.

நமது மாநிலத்தில் மட்டுமல்ல வெளியிடங்களிலும், இப்போக்கு, காங்கிரசாட்சியில் சர்வசாதாரணமாக இருப்பதைக் காட்டும் நிகழ்ச்சிகள் ஏராளமுண்டு. இவைகளில் குறிப்பிடக் கூடியவை அண்மையில் கிழக்குப் பஞ்சாபிலுள்ள ஹோசியார்பூர் என்ற ஊரில் நிகழ்ந்த வேதனைகளும் கடந்த ஆண்டு பாட்னா பல்கலைக் கழகத்து மாணவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமும் ஆகும்.

பாட்னாவில் துப்பாக்கிக் குண்டால் ஒரு மாணவர் பிணமானார்! அவருடைய மனைவி, இறந்துபோன வாலிபக் கணவனை எண்ணி எண்ணி வாழ்வு பறிக்கப்பட்டு அமங்கலியாக யிருக்கிறாள்— காங்கிரசின் வெறிக் குணத்தை விளக்குவது போல!

ஹோசியார்பூரில் நிகழ்ந்த சம்பவங்கள், வாசகர்களின் நினைப்பில் இன்னும் ஈரமாக யிருக்கக் கூடும். அங்கே, காங்கிரசின் போக்கினை விளக்குவது போல, கற்பிழந்தவர்களாக உலவுகிறார்கள்— கன்னியர் பலர்.

இரண்டு இடத்திலும் இவ்வளவு வெறிச்செயல் வளரக் காரணம் நேருவின் பிடிவாதம் என்பதை எவரும் மறுக்கார்! பாட்னா பல்கலைக் கழக மாணவர்கள் உரிமை கோரி கிளர்ச்சி செய்தபோது, "நான் மிரளமாட்டேன். இப்படியெல்லாம் நடந்துகொள்வதை அனுமதியேன்" என்று ஆர்ப்பரித்தாரே ஒழிய, அன்புடன் பிரச்னையை அணுகவில்லை. விளைவு, விபரீதமாயிற்று!

அதுபோலவே, பஞ்சாப் மொழிவாரிப் பிரச்னையிலும் நேரு, தன்மையுள்ளவராகத் தன்னை வளைத்துக்கொள்ளாததாலேயே 'ஹோசியார்பூர்' நடக்க ஏதுவாயிற்று!

நேருவின் உறுதியை நிறைவேற்றும் வகையிலேயே, பஞ்சாப் மாநில அரசும், பீகார் மாகாண சர்க்காரும் நடந்துகொண்டன.

இப்போது அந்த இரு சர்க்கார்களும் 'நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளன. யார் மீது? அதிகாரிகள் மீது!

நிகழ்ந்த சம்பவங்களுக்கு, அதிகாரிகள் மட்டு மல்ல, அரசும் தான் காரணம். ஆனால் அரசு, தன்னுடைய மாசைத் துடைத்துக்கொள்வதற்காக அதிகாரிகளைப் பழி வாங்குகிறது. சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் விரைவில் வீட்டுக்கு அனுப்பப்படக்கூடும்.

தன்னிலை மறந்து தர்பார் நடத்தும் அதிகாரிகள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டியதுதான்! ஆனால் அவர்களை ஆட்டிப்படைக்கும் அரசுமட்டும், எவ்வாறு விதிவிலக்காகும்? மாநில அரசு, தம்மீது குற்றமில்லையென்று நிரூபிக்க, அதிகாரிகளை வீட்டுக்கனுப்பி பழி வாங்கிக்கொள்ளலாம்!நேருவும்அதைக் காட்டி, தன்மீது மாசுமறுவில்லையென்று உலகுக்குணர்த்திக்கொள்ளக்கூடும்!

ஆனால், வாங்கும்சம்பளத்துக்காக எஜமானனைத் திருப்திப்படுத்த எண்ணி, இப்போது குற்றச் சுமையுடன் வீட்டுக்கு அனுப்பப்படும் அதிகாரிகளுக்காகப் பரிந்து பேசுவோர். யார்? ஒருவரும் கிடையாது! மக்கள்முன், 'பழிபாவத்துக்கு அஞ்சாதவன்' எனும் பெயரைச் சுமந்துகொண்டு இவர்கள் உலவவேண்டும்! அதே சமயத்தில், அக்கிரமங்களுக்கு காரணமான பாரதத்தலைவர்கள் 'ஜே!' வாழ்த்துடன்பவனி வருவார்கள்!

இந்த நிலைமையினை, ஒவ்வொரு இடத்திலும் இருக்கிற அதிகாரிகள் உணரவேண்டும்; அதற்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டும். ஹோசியார்பூரும், பாட்னாவும் அதைத்தான் உணர்த்துகிறது.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.